விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 02 வெள்ளிக்கிழமை (17.12.2004) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 364

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதனம் தர
தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

## ஒஸ்லோ தீர்மானங்களிற்கு அமைவாக

## விடுதலைப் புலிகளுடன் பேச அரசு தயார்!

### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(நமது நிருபர்)

2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி ஒஸ்லோவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வொன்றினை மேற்கொள்வதற்கும் அது தொடர்பாக விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும், அதன் அடிப்படையில் இடைக்கால அதிகாரசபை ஒன்றை நிறுவுவதற்கும் அரசு தயாராகவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

### வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோரை

## மீட்கச் சென்று காணாமல்போன 11 கடற்படையினரும் மீட்பு

பொலநறுவை மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் காணாமல் போன 11 கடற்படைச் சிப்பாய்கள் 6 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உட்பட 22 பேரும் நேற்று மீட்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை கடற்படைத் தளத்திலிருந்து இரண்டு படகுகளில் பாதிக்கப்பட்டவர்களை மீட்கச் சென்ற கடற்படைச் சிப்பாய்கள் 11 பேரும் சோமாவதி விகாரைப் பிரதேசத்தில் கடமையிலிருந்த 6 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் 5 பொது மக்கள் ஆகியோரை படகில் ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினம் இரவு திருகோணமலைக்குச் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அதன்போது அவர்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதனையடுத்து அவர்கள் காணாமல்போனதாக கருதப்பட்டு உலங்கு வானூர்திகள் மற்றும் படகுகள் மூலம் இரவிரவாக தேடுதல் நடாத்தப்பட்டது.

இதன்போது நேற்றுக்காலை அவர்கள் திருகோணமலைக்கு திரும்பிக்கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. கடற்படையினரிடமிருந்த தொலைத் தொடர்புக் கருவிகள் செயலிழந்தமையினாலேயே தொடர்பு துண்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## இடைக்கால நிர்வாக அடிப்படையில் புலிகளுடன் அரசு உடன் பேசவேண்டும்

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவர் ஜனாதிபதியிடம் நேரில் வேண்டுகோள்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் பேச்சு நடத்தி தமிழ் மக்களுக்கு ஓர் நிரந்தர தீர்வினை பெற்றுத்தருமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். செல்வக்குமார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேரில் சென்று கேட்டுள்ளார்.

நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற அனைத்து பல்கலைக் கழகங்களில் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பின்போதே அவர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது பல்கலைக்கழகங்களில் காணப்படும் குறைபாடுகள், அவற்றுக்கான தீர்வுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அக் கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழகம் தொடர்பான குறைபாடுகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதரகம் இழுத்து மூடப்பட்டது

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் நேற்று மாலை திடீரென இழுத்து மூடப்பட்டது.

நேற்று மாலை நோர்வேத் தூதரத்திற்கு அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றில் வெள்ளைத் துகள்கள் காணப்பட்டது. இதனையடுத்து அது அந்திரக்ஸ் கிருமியாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் தூதரகம் மூடப்பட்டது.

இன்று நோர்வேத் தூதரகத்தில் நடைபெறவிருந்த நிகழ்வுகளும் அந்திரக்ஸ் பீதி காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந் நிகழ்வுகளில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் கலந்து கொள்ளவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நோர்வே தூதரம் அந்திரக்ஸ் பீதி காரணமாக மூடப்பட்டமை குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். நாளைவரை தூதரகம் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-04)

## இடைக்கால நிர்வாக யோசனையில் புலிகளுடன் பேச நாம் அனுமதியோம்

### ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை யோசனைகளின் அடிப்படையில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாதென ஜே.வி.பியின் தலைமைச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை வகித்த நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பி. எந்த விதத்திலும் தடையாக இருக்கமாட்டாது எனினும் இடைக்கால நிர்வாக சபை யோசனையில் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆளும் கூட்டமைப்பு அரசாங்கத்தில் தற்போது பிரதான பங்காளிக் கட்சியாக காணப்படும் நாங்கள் மக்களின் முக்கியமான பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வந்த கட்சியாகவே காணப்படுகின்றோம்.

நாட்டில் ஜனநாயகத்தையும் இறைமையையும் பாதுகாக்கும் நோக்குடன் கடந்த யுத்தநிறுத்த மீறல்கள், வன்முறைகளை அடியோடு ஒழிக்கும் நோக்குடன் தான் நாம் ஜனாதிபதியுடன் சேர்ந்து கூட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வீச்சுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

இந்தியக் கலைஞர்கள் பங்குகொண்ட கலை நிகழ்வில் இடம்பெற்ற குண்டுவீச்சுச் சம்பவத்தைக் கண்டித்து கோட்டை ரயில் நிலையத்தின் முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. சுயாதீன ஊடகவியலாளர்கள் சங்கம் ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்திருந்தது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதேவேளை இந்திய நாட்டின் கலைஞர்கள் நடாத்திய இந் நிகழ்வில் இடம்பெற்ற குண்டுவீச்சுச் சம்பவம் எமது நாட்டிற்கு சர்வதேச மட்டத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார். இச் செயலானது இலங்கையின் தன்மானத்துக்கு களங்கத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமானதும் பயங்கரவாத நடவடிக்கையும் ஆகும்.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இனவாதிகளுக்கெதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச-04)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இன்று ஒரு தகவல்

# ஐன்ஸ்ரீன்

ஒரு சிறு பையன் இருந்தான். அவனைப் பார்க்கும் எல்லோரும் மக்கு என்று தான் சொல்வார்கள்.அவனும் அப்படித்தான் இருந்தான். அதுமட்டுமல்ல மிகவும் வெட்கப்படுவான்.மற்ற சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடுவதற்குக் கூட வெட்கம்.அதனால் அவர்களது வீட்டில் உள்ள கோழிக்குஞ்சுடன் தான் அவன் விளையாடிக் கொண்டிருப்பான்.

அவன் ஒருநாள் பஸ்வண்டியில் ஏறி போனான். டிரைவர் இவனிடம் காசு வாங்கி டிக்கெற்றும் மீதிக்காசையும் கொடுத்தார். வாங்கி எண்ணிப்பார்த்தான் காசு குறைவது போல் அவனுக்குப்பட்டது உடனே நடத்துனரிடம் "என்ன ஐயா பணம் குறைவாக இருக்கிறதே" என்றான். அவர் பணத்தை வாங்கி எண்ணிப் பார்த்தார் அது சரியாகவே இருந்தது. நடத்துனருக்கோ எரிச்சல் "என்னப்பா சரியாகத்தானே இருக்கிறது. உனக்கு கணக்குத் தெரியாதா?" என்று ஏசினார். சில்லறைக் காசைச் சரியாகக் கூட்டிப் பார்க்கத் தெரியாத அந்தச் சிறு பையனின் பெயர் என்ன தெரியுமா? ஐன்ஸ்ரீன்.

ஆமாம்... அந்தப் பையன் தான் வளர்ந்து கணித மேதையானான். பிற்காலத்தில் அவர் போட்ட கணக்கை உலகமே புரிந்துகொள்ள மிகவும் கஷ்டப்பட்டது. அல்பிரட் ஐன்ஸ்ரீனும் ஒரு புதிர். அவர்கண்டு பிடித்த தத்துவமும் ஒரு புதிர் என்று தான் எல்லோருமே கூறுவார்கள்.

மனித அறிவுக்கு இதுவரை எட்டாமல் இருந்த ஒரு பெரிய தத்துவத்தை இவர் புரிந்துகொண்டார். அவர் புரிந்து கொண்ட அளவுக்கு மற்றவர்களையும் புரிய வைக்க அவரால் முடியவில்லை. அதனால் தான் இந்தத் தத்துவத்தைப் பற்றியே இதுவரை 900 புத்தகங்களுக்கு மேல் வெளிவந்துள்ளது. எத்தனை புத்தகம் வந்தது என்று தெரியுமே தவிர அதில் உள்ளதை புரிந்து கொண்டோர் எத்தனை பேர் என்பது தெரியாது.

"திடப்பொருள் எல்லாம் அழிந்து விடும். ஆனால் அதுபோல் காலமும் இடமும் அழியாது நிலைத்திருக்கும் என முன்பு இருந்த விஞ்ஞானிகள் சொல்வார்கள். ஆனால் இவர் என்ன சொன்னார் தெரியுமா? திடப்பொருள் அழிந்துவிடுமென்றால் காலமும் இடமும் அழிந்தே தீரும்" என்றார். அதை நிரூபித்தும் காட்டினார்.

ஐன்ஸ்ரீன் ஒருமுறை ரயிலில் போகும் போது பசி ஏற்பட்டது ஏதாவது சாப்பிடவேண்டும் என்று ரயில்வே சிற்றுண்டிச்சாலைக்குப் போய் "சாப்பிட என்ன உணவு இருக்கிறது?" என்று கேட்டார். அங்கே வேலைசெய்து கொண்டிருந்த ஆள் பட்டியல் ஒன்றை எடுத்து இவரிடம் நீட்டினார். அதைப் படித்துப் பார்க்கலாம் என்று நினைத்து கண்ணாடியைத் தேடினார் கிடைக்கவில்லை. எங்கேயோ தவறவிட்டு விட்டார்.

அதனால் பட்டியல்ல அவரிடமே கொடுத்து "இதை நீயே படித்துக் காட்டு" என்று கொடுத்தார். அதற்கு அந்த ஆள் " நானும் உங்களை மாதிரித் தான் சார் படிக்கத் தெரியாதவன்" என்றார். இவருக்கு வந்த சிரிப்பில பசி கூட மறந்துவிட்டது. பொதுவாக ஒரே விடயத்தில் ஆழ்ந்த சிந்தனை உள்ளவர்கள் மற்ற விடயங்களில் அதிகமாக அக்கறை காட்டுவதில்லை.

ஐன்ஸ்ரினைப் பற்றி இன்னுமொரு கதையும் உண்டு. ஆண்கள் பொதுவாக குளிக்க ஒரு சவர்க்காரம், முகச் சவரம் செய்வதற்கு ஒரு சவர்க்காரம் என்று வைத்திருப்பது வழக்கம்.ஆனால் ஐன்ஸ்ரின் இப்படி தனித்தனியாக வைத்துக்கொள்ளவில்லையாம். இரண்டிற்கும் ஒரே சவர்க்காரத்தைத் தான் உபயோகப்படுத்தினாராம். அதைப் பார்த்தவர்கள் அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் "இதற்கென இரண்டு சோப் பயன்படுத்தினால் அது என்னைக் குழப்பிவிடும்" என்றாராம் இவர். தத்துவ உலகத்தையே குழப்புகிறது. ஆனால் இவர் எப்படிக் குழப்புகிறார் பார்த்தீர்களா?

இவ்வளவையும் கூறிவிட்டு நான் கடைசியாக கூற வரும் விடய்ம் என்ன தெரியுமா? பெரிய மேதைகள் எல்லோரும் ஞாபகமறதிக்காரர்களாக இருக்கலாம் ஆனால்... ஞாபகமறதி இருப்போரையெல்லாம் மேதைகள் என்று நினைக்கக்கூடாது.அப்படிப் பார்த்தால் உலகில் வாழும் அதிகமானோர் மேதைகள்.

எனது நண்பர் ஒருவர் அவருக்கு அதிக ஞாபகமறதி. இதற்காக ஒருநாள் மருத்துவரிடம் போனார் "டாக்டர் என்னால் எதையும் நினைவில் வைத்துக்கொள்ள முடியவில்லை. கொஞ்சநேரத்திலேயே மறந்துவிடுகிறேன. நீங்கள் தான் ஏதாவது மருந்து கொடுத்து இதைச் சரி செய்ய வேண்டும்" என்றார். "சரி! உங்களுக்கு எத்தனை நாளாக இது இருக்கிறது?" என்று கேட்டார் டாக்டர். உடனே இவர் என்ன சொன்னார் தெரியுமா? "எது... எத்தனை நாளாக இருக்கிறது என்று கேட்கிறீர்கள்?" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மாவீரர்களின் தியாக நெருப்பால் கருணாவின் தேசவிரோதக் கும்பல் சாம்பலாகி விட்டது

## அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(மட்டக்களப்பு)

மாவீரர்களின் தியாக நெருப்பால் கருணா என்னும் தேசவிரோதக் கும்பல் கருகி எரிந்து சாம்பலாகிவிட்டது. கருகிய சாம்பல் உயிர் பெறமுடியாது என்பது தமிழர்களுக்குத் தெரியும்.

கருகிய சாம்பலுக்கு உயிர் கொடுக்கின்றனர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் என அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணம் வழங்கும் ஏற்பாட்டுக் கூட்டம் நேற்று முன்தினம் திருக்கோயில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் சங்கரி, நிர்வாகப் பொறுப்பாளர் முரளி மற்றும் திருக்கோவில் பிரதேச செயலாளர் தவராசா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தற்பொழுது சிங்கள அரசு கருணா பெயரைப் பயன்படுத்தி பல கொலைகளைப் புரிந்து வருகின்றது. அனைத்து தமிழ் மக்களும் இதை நன்கு புரிந்துள்ளனர். அதனாலேயே தமிழ்த் தேசியத்தை நம்பி கிராம சேவகர்கள், பிரதேச செயலாளர்கள், பொதுமக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், வியாபார ஸ்தாபனங்கள் ஆகியன ஒன்றிணைந்து மாவீரர் தினத்தை சிறப்பாக நடாத்தின.

மாவீரர்களின் தியாகத்தை மதிக்கின்றோம். அவர்கள எமது உரிமையைப் பெற வித்தானார்கள். அதற்காக எமது உரிமைகளை நாம் வென்றெடுக்க வேண்டும். தற்பொழுது இடம்பெறும் கொலைகளைப் புரிபவர்கள் தற்பொழுது கருணா குழுவிற்கு உயிர் கொடுத்துக் கொண்டிருக்கின்ற சிங்கள இராணுவப் புலனாய்வுப் பிரிவு என்பது எமக்குத் தெரியும்.

சொந்த வாழ்விடத்தை விட்டுக்கொடுக்காத படையினர் எமது தமிழ்மக்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்காத படையினர் எவ்வாறு அபிவிருத்தியைச செய்யப் போகின்றார்கள்.

இவர்கள் தமிழ்த் தேசியத்தைச் சிதைக்க முற்படுகினறார்கள். சிங்கள அரசும், சிங்கள இராணுவமும் ஒரே குட்டைக்குள் ஊறிய மட்டைகள் தான் என்பது தமிழர்களுக்கு நன்கு தெரியும்.

தமிழ் மக்களின் வாழ்விடங்களை அழித்தவர்கள இவர்கள். தமிழீழத்தை வெறுத்தவர்கள் இவர்கள். இன்று சமாதானத்தை வலியுறுத்துகின்றனர். அப்படி இராணுவம் சமாதானத்தை விரும்புகின்றதென்றால் எங்கே பார்க்கலாம் சிங்கள அரசுக்கு பாரிய அழுத்தத்தைக் கொடுக்கட்டும்.

இவர்கள் போலி நாடகமாடுகின்றார்கள். தமிழ மக்களுக்கு இராணுவத்தினர் அசௌகரியங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறாக தமிழ் மக்களுக்கு சிங்கள இராணுவம் கொடுக்கின்ற அசௌகரியங்கள் மீண்டும் சமாதானத்தைக் குழப்புகின்ற செயலாகவே இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

## விடுதலை

அரசு உடமைகளைச் சேதீப்படுத்திய குற்றச்சாட்டின பேரில் கைது செய்யப்பட்ட திஸநாயக்க மற்றும் மஹிந்த விஜயசேகர ஆகியோரின் புதல்வர்கள் உட்பட 6 பேரையும் கொழும்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளது.

முன்னாள் அமைச்சர்களான மஹிந்தவிஜயசேகர, எஸ்.பி.திஸநாயக்க ஆகியோரின் புதல்வாகள உட்பட அறுவர் கடந்த வருடம் ஜனவரி மாதம் 10ஆம் திகதி கொழும்பில் உள்ள உல்லாசப்பயண ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற சம்பவமொன்றின் போது கல்வி உயர்கல்வி அமைச்சுக்குரிய வாகனத்தை சேதமாக்கினர்.

மேறபடி வாகனத்திற்கு ஏற்பட்ட சேதத்திற்கு நஷ்டஈடாக 53 ஆயிரம் ரூபாவைச் செலுத்த இணக்கம் தெரிவித்ததையடுத்து நீதிமன்றம் மேற்படி அறுவரையும் விடுதலை செய்துள்ளது. (ற-4)

## இராசிபலன்

**17.12.2004**
**(மார்கழி 2 வெள்ளிக்கிழமை)**
**சஷ்டி மாலை 6.32 மணிவரை**
**சதயம் பி.இ 5.10 மணிவரை**
**இராகுகாலம் 10.53- 12.23 மணிவரை**
**சுபநேரம் 6.23- 7.53 மணிவரை**
**விநாயகர் சஷ்டி விரதம்**

- **மேடம்** — தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், போசன சுகம், பெருமையடைதல்.
- **இடபம்** — தொழில் மேன்மை, தெய்வ சிந்தை, எடுத்த கருமங்கள் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு.
- **மிதுனம்** — புதிய திட்டமிடல், சரீரப் பிரயாசை, இடமாற்றம், முயற்சி தாமதம்.
- **கடகம்** — வாகன பயம், திருடர் தொல்லை, போசன சுகம், காரிய தாமதம்.
- **சிங்கம்** — நல்ல வரவேற்பு, புதிய தகவல், காரிய அனுகூலம், தெய்வ தரிசனம்.
- **கன்னி** — காரிய அனுகூலம், உடல் நலம், நல்ல வருமானம், புதிய தகவல்.
- **துலாம்** — புத்திரரால் கவலை, கௌரவக் குறைவு, வேலைச்சுமை, சிறுவியாதி.
- **விருச்சிகம்** — மாதா சுகம், கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம், தொழில் சிந்தை.
- **தனுசு** — கூட்டு முயற்சி, தெய்வதரிசனம், பண வருவாய், நண்பர்கள் சந்திப்பு.
- **மகரம்** — பணவிரயம், வீண் வார்த்தை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், திடீர் பயணம்
- **கும்பம்** — தெய்வசிந்தை, நல்ல முயற்சி, பெரியோர் சந்திப்பு, போசன நன்மை.
- **மீனம்** — காரிய அலைச்சல், தனவிரயம், உறவினர் வெறுப்பு, சயனசுகக் குறைவு.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
– வளவன்

## குண்டுத் தாக்குதல் விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் துறையினரிடம்

(கொழும்பு)

கொழும்பில் இந்திய நட்சத்திரங்கள் கலந்து கொண்ட கலைநிகழ்ச்சியில் வீசப்பட்ட கைக்குண்டு இலங்கை இராணுவத்தினரால் பயன்படுத்தப்படும் கைககுண்டு என அரச பகுப்பாய்வு அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.

இராணுவத்தில் பயிற்றப்பட்ட ஒருவராலேயே இந்தக் குண்டு வீசப்பட்டிருக்கலாம் என்று கருதப் படுகினறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மீது பழிபோடுவதற்காக, ஆளும் கட்சியான சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ அல்லது அதன் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி.யோ இச் சதி முயற்சியின் சூத்திரதாரிகளாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அன்றைய தினம் இடம்பெற்ற வன்முறைகளின் போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட 12 பேர் உட்பட 40 போின் வாக்குமூலங்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு குற்றப்புலனாய்வுத் துறையினரிடம் தற்போது கையளிக்கப்பட்டுள்ளது. (ற-4)

## முஸ்லிம்களுக்கு தனியான சமாதான செயலகம்?

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு தனியான சமாதான செயலகம ஒன்றை அமைக்கும் வகையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் தேசிய ஐக்கிய முன்னணி (நு.ஆ.)யும் கைச்சாத்திட்டுள்ளன.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி திருமதி பேரியல் அஷ்ரப்பும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாகத் தெரிவக்கப்படுகின்றது.

அத்துடன், பிரிந்திருக்கும் முஸ்லிம் குழுக்களை ஒன்றாக இணைக்கும் பணியில் இரு தரப்பினரும் தீவிரமாக ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்காலத்தில் இடம்பெறும் சமாதானப் பேச்வார்த்தைகளில் முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகள் தனித்தரப்பாக பங்கேற்பதை உறுதிசெய்வது இநத சமாதான செயலகத்தின் பிரதான பொறுப்பாகும் என முஸ்லிம் காங்கிரஸின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தமது இவ்வுடன்படிக்கை குறித்து அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் விரைவில் அறிவிக்கப்படும என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பிரிந்துசென்ற முஸ்லிம் குழுக்கள் அனைத்தும் ஒன்றுபடுவது குறித்து முஸ்லிம் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இந்த ஒற்றுமை தொடர்ந்தும் நிலைக்க வேண்டும் என தாம் பிரார்த்தனை செய்வதாகவும் கூறுகின்றார்கள்.

இந்த நிலையில் தமிழ் மக்களின் நிலைமைகளை அவதானிக்கும் போது மிக அனுதாபப்பட வேண்டியுள்ளதாக அரசியல் அவதானி ஒருவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு சமூகத்தின் பிரதிநிதிகளும் தமது மக்களின் நலன்கருதி பகைமைகளை மறந்து ஒன்றுபட்டு வரும் நிலையில் தமிழ்க் கட்சிகள் மட்டும் மேலும மேலும் முரண்பாடுகளை வளர்த்து ஒவ்வொரு கோணத்தில் இருப்பதை நினைத்து தான் கவலை அடைவதாகவும் அந்த அரசியல் விமர்சகர் மேலும் கூறினார். (க-9)

# யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனுடன் ஓர் சந்திப்பு

**37 ஆண்டுகள் அரச சேவையில் பல்வேறு மாவட்டங்களிலும் பணியாற்றி, இவ்வாண்டு இறுதியில் ஓய்வு பெறவுள்ள யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் வலம்புரிப் பத்திரிகைக்கு அளித்த செவ்வி**

**37 வருட அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்று உலக வங்கியின் வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டப் பணிப்பாளராக பொறுப்பேற்றுச் செல்லும் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனை அவரது அலுவலகத்தில் சந்தித்த போது தமது தொழில்சார் அனுபவங்களை வலம்புரிப் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.**



எனது ஆரம்பக் கல்வியை அரியாலை சிறிபார்வதி வித்தியாசாலையிலும் உயர் கல்வியை யாழ்.பரியோவான் கல்லூரியிலும் கற்றேன். அரச துறையில் 1967 ஆம் ஆண்டு விவசாயத்திணைக்களத்தில் எழுது வினைஞராகச் சேர்ந்தேன். அதன் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப்படிப்பு படித்து அதில் பொருளியல் சிறப்புப் பட்டத்தை பெற்றுக் கொண்டேன்.

1973 ஆம் ஆண்டு அரசாங்க கணக்காளர் பரீட்சையில் சித்தியெய்தி பேராதனை விவசாயத் திணைக்களத்தின் கணக்காளராக சேவையாற்றி 1975 ஆம் ஆண்டு இலங்கை பட்டயக்கணக்காளர் பரீட்சையில் சித்தியெயதி அரசாங்கத்தின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஒருவருடம் பட்டாயக் கணக்காளர் நிறுவனத்தில் பயிற்சிபெற்று முதலாவது பரீட்சையில் சித்தியடைந் தேன.

அதே நேரத்தில் இலங்கை நிர்வாக சேவை பரீடசையிலும் சிந்தியடைந்தால், அரச கணக்காளராக இருப்பதிலும பார்க்க நிர்வாகத்துறையில் இருப்பது சிறந்தது எனக் கருதியதால், இலங்கை நிர்வாக சேவைக்குள் இணைந்தேன். இதன் பயனாக 1976 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டக் காணியதிகாரியாக நியமிக்கப்பட்டு சிறிது காலத்தின் பின்னர் களுத்துறை மாவட்டத்துக்கு மாற்றபபட்டு களுத்துறை மாவட்டக் காணி அதிகாரியாகக கடமையாற்றினேன்.

பின்னர் 1982 ஆம் ஆண்டு யாழ்ப்பாணததுக்கு இடம் மாற்றப்பட்டு, யாழ். மாவட்ட காணி அதிகாரியாக நியமிக்கப பட்டேன். பின்னர் கிளிநொச்சி மாவட்டத்திலும், 1988 ஆம் ஆண்டு வவுனியா மாவடட மேலதிக அரச அதிபராக நியமிக் கப்பட்டேன். அப்பதவியுடன் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டப் பணிப்பாளராகவும் பொறுப்பேற்றுக் கொண்டேன்.

அப்போது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் சமாதானச் சூழ்நிலையில் முதலாவது புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டத்தை வவுனியா மாவட்டத்தில் செயற்படுத்தக் கூடிய நிலை ஏற்படுத்தப்பட்டது. அதன் பின்னர் 1989 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் புலமைப் பரிசுத் திட்டத்தின் கீழ் இஸ்ரேல் நாட்டுக்குச் சென்று ஒன்பது மாதம் பட்ட மேற்படிப்புப் பிராந்தியத் திட்டமிடல் கல்வியைக் கற்று நாடு திரும்பினேன்.

அதன் பின்னர் விடு தலைப்புலிகளுக்கும் - இந்திய இராணுவத்துக்கும் இடையில் யுத்தம் நிலவிய காலப்பகுதியில் வவுனியா மாவட்ட அரச அதிபராகக் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டேன். 1990 ஆம் ஆண்டு யூலை மாதம யாழ்.மாவட்ட திட்டப் பணிப்பாளராக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டேன். 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1995 ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை யாழ்.மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளராகவும், 1995 ஆம ஆண்டு நவம்பரில் ஏற்பட்ட பாரிய இடப் பெயர்வு சமயத்தில் சாவகச்சேரியில் யாழ்.செயலகம் இயங்கிய காலப்பகுதியில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டேன்.

1997 ஆம் ஆண்டு வரை யாழ்.மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றி அந்தக் காலப்பகுதியில் மிகுந்த நெருக்கடி நிலையில் யாழ்.மக்களுக்கு சேவை யாற்றிய திருப்தி எனக்கு உண்டு. 1998 ஆம் ஆண்டின் பின்னர் திட்ட அமுலாக்கல் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளராக பதவி கிடைத்தும் சில அசாதாரண சூழ்நிலை காரணமாக அது தடுக்கப்பட்டு, கால்நடை வளர்ப்பு சமூக அபிவிருத்தி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டு, பின்னர் 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் இன்று வரை அரசாங்கம் கோரிய காரணத்தினால் யாழ்.மாவட்ட அரச அதிபராகக் கடமைகளை செய்து வருகின்றேன் என்றார்.

அவர் மேலும் கூறுகையில், எனது சேவைக் காலம் பல வரலாற்றுக் கட்டங்களை கொண்டது, பல்வேறு காலகட்ட நிலைமைகளில் ஏற்பட்ட பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்பட்டன, அதில் என்னுடன் கடமையாற்றியவர்கள் எவ்வாறு நடந்து கொண்டனர், இளம் அரச உத்தியோகஸ்தர்கள் எதிர்காலத்தில் என்ன என்ன இன்னல்களை எதிர்நோக்கப் போகின்றனர் என்பவற்றை நான் ஓய்வு பெற்றுச் செல்லும் முன் எல்லா ஊடகவியலாளர்களையும் அழைத்துக் கூற விரும்புகின்றேன் என்றார்.

இதன் போது மக்களுக்கு ஏதாவது கூற விரும்புகின்றீர்களா என அவரிடம் கேட்டபோது,

நான் 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம 30.ஆம திகதி அன்று 59 ஆவது வயதில அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவதற்கான எனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளேன். உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள வடக்கு - கிழக்கு வீடமைப்புத் திட்டத்தின பணிப்பாளர் பதவியை கடந்த ஒக்டோபரில் பொறுப்பு ஏற்று தற்பொழுது இரண்டு கடமையையும் செய்து வருகின்றேன். ஓய்வு பெற்ற பின்னர் அக்கடமையை முழுமையாக செய்ய உள்ளேன் எனத் தெரிவித்தார்.

ஊடகவியலாளருடனான சந்திப்பின் போது அவர் இன்னும் பல முக்கிய விடயங்களைத் தெரிவிப்பார் என எதிர்பார்க்கின்றோம். (து-5,19)

# நாவலர் குருபூசை தின விழாவில் சொற்பொழிவாளர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் நடாத்தப்பட்ட ஞானயாகமாகச் சொற்பொழிவு செய்தவர்களைப பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி நாவலர் மணி மண்டபத்தில் நாவலர் குருபூசைத் தினத்தன்று நடைபெற்றது.

இவ் வைபவத்தில் 34 சொற்பொழிவாளர்கள் நேரடியாக வந்து தங்கள் கௌரவத்தைப் பெற்றிருந்தனர். யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா மற்றும் நல்லை ஆதீன முதல்வர் ஆகியோர் சொற்பொழிவாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தனர்.

நாவலர் பெருமானுடைய சிந்தனையில உருவாகிய சைவப்பிரசாகரர் பயிற்சித் திட்டத்தைச் செயற்படுத்தும் ஓர் நிகழ்வாக இவ்வைபவம் அமைந்துள்ளது,

இந் நிகழ்வில் கௌரவம் பெற்றவர்களுடைய பெயர் விபரம் வருமாறு:-

பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர், பேராசிரியர் அ.சண்முகதாஸ், சிவத்திரு சிவ.சண்முகவடிவேல், ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம், மாவை செ.நவரத்தினம், கலாநிதி மாரிமுத்து வேதநாதன், திருமதி மனோன்மணி சண்முகதாஸ்,

பண்டிதர் வ.பேரின்பநாயகம், கோ.சி.வேலாயுதம்,செல்வி மலர் சின்னையா, பொ.அருணகிரிநாதன், சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன், சைவப்புலவர் செ.கந்தசத்தியதாஸன், ச.லலீசன்,

ஜெ.கோககலே, காரை எம்.பி.அருளானந்தன், செல்வி சிவயோகராணி கதிரவேலு, நித்தியதசீதரன், ஆனந்தராசா, சைவப்புலவர் கா.கமலநாதன், பரமேஸ்வரன், ச.பாலசண்முகன், ப.சிவலோகநாதன், இராஜலட்சுமணன், பா.ஜெயக்குமார், இராமஈஸ்வரன், இரா.கேதீஸ்வரன், ம.சுதர்சன், துரை.கணேசமூர்த்தி, தி.கேசவன், நா.நவராஜ் மற்றும் சைவ சித்தாந்தப் பண்டிதர் செ.சிவபாதம், சிவமகாலிங்கம், மணிமண்டப ஓதுவார் ச.கனகரத்தினம்,

அன்றைய சொற்பொழிவாளர்கள் கௌரவத்தில பங்குகொள்ளாதவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பன்னிரண்டுபேர் அன்றைய தினம் கௌரவம் பெற்றனர். கௌரவம் பெற்றவர்களுடைய பெயர் விபரம் வருமாறு:-

சைவப்புலவர் சு.செல்லத்துரை, சைவப்புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை, சிவஸ்ரீ ப.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்), திருமதி.பா.பாலசிங்கம், சிவ.தட்ஷணாமூர்த்தி, கு.குருபரன், சுவாமி ஸ்ரீவிசுவாம்பாள் விசாலாட்சி மாதாஜி, ஆ.சிவநாதன், திருமதி கோதை நகுலராஜா, சிவஸ்ரீ அருணாசலம் வாசுதேவன், இ.மகேஸ்வராஜ், திருமதி பா.உதயகுமார், மாவை.நவரத்தினம். (ந-19)

## புகையிலை நாற்று விற்பனை

(பொலிகண்டி)

பொலிகண்டியில் உள்ள பல பகுதிகளிலும் புகையிலை நாற்றுக்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பொலி கண்டி விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுவரும் இந்நாற்றுக்களைப் பல்வேறு இடங்களிலிருந்தும் வரும் விவசாயிகள் கொள்வனவு செய்து வருவதாகவும் தெரியவருகிறது. (ப-106)

## விடைத்தாள் திருத்தும் பணி ஜனவரியில் ஆரம்பம்

(கொழும்பு)

நாடு முழுவதும் தற்பொழுது நடைபெற்று வரும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள்களை திருத்தும் பணிகள் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளன.

முதற்கட்டத் திருத்தும் பணிகள் ஜனவரி முதலாம் திகதி முதல் பத்தாம திகதி வரை 91 நிலையங்களில் நடைபெறவுள்ளது. இரண்டாம் கட்ட மதிப்பீட்டுப் பணிகள் ஜனவரி 29 ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 6 ஆம் திகதி வரை 26 நிலையங்களில் நடைபெறும்.

இம் முறை இப்பரீட்சை முடிவுகளை விரைவாக வெளியிட பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முதலாம் தவணைக்காக பாடசாலைகள் அடுத்த வருடம் ஜனவரி 3ஆம் திகதி ஆரம்பமாகின்ற போதும் விடைத்தாள் மதிப்பீடு இடம்பெறும் பாடசாலைகள் 11 ஆம் திகதியே ஆரம்பமாகுமெனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ச-7)

## அதிரடிப் படையில் பல மாற்றங்கள்!

(கொழும்பு)

விசேட அதிரடிப்படைப் பிரிவில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்துப் பிரதி பொலிஸ்மா அதிபர் நிமால் லியூக் கருத்து வெளியிட்ட போது,

காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் இந்த மாற்றம் வழமையானது எனவும், இதில் எந்தவிதமான விசேட நோக்கங்களும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் கிழக்கு மாகாண அதிரடிப்படையின் இயக்குநராக பொலிஸ் அத்தியட்சகர் உப்புல் செனிவிரட்ன பதவி ஏற்றுள்ள அதேவேளை, கிழக்கு மாகாணத்தின் இயக்குநராகப பதவி [illegible] சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் [illegible] நாயக்க நிர்வாக இயக்குநர் பதவியையும் ஏற்றுள்ளார். (க-4)

## நீரில் மூழ்கி இருவர் பலி

(மட்டக்களப்பு)

கோமாரிப் பிரதேசத்தில் கடல் நீரினால் அடித்துச் செல்லப்பட்டு சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கோமாரி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் தரம் 4 இல் கல்வி பயிலும் செல்லக்கிளி பேபிசாளினி (வயது -8) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிர் இழந்தவராவார்.

கோமாரிப் பிரதேசத்தில் முகத்துவாரத்தினைப் பார்வையிடுவதற்காகச் சென்ற வேளையில் இவர் நீரினால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார். சடலத்தினை விடுதலைப்புலிகளின் கோமாரிப் பிரதேச அரசியல்துறையினர் மீட்டு உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதுபோன்ற இன்னுமொரு சம்பவத்தில் வேப்பவெட்டுவான் தாழமடுக்குளத்தில் நீரில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பு சின்ன ஊறனியைச் சேர்ந்த நற்குணசிங்கம் (வயது 32) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ந-4)

## மட்டக்களப்பு கல்லடியில் இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ணபுரத்தில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவர் இனம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவர் அருந்தவராசா ஜெயகரன் (வயது -22) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரது வீட்டுக்கு அருகாமையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏற்கனவே, ரெலோ அமைப்பில் இருந்த இவர் பின்னர் அதிலிருந்து விலகி சில காலம் கொழும்பில் வசித்து வந்துள்ளார். ஒரு வாரத்திற்கு முன்னராக இவர் கொழும்பில் இருந்து கல்லடியில் உள்ள இவரது வீட்டிற்கு வந்திருந்தார் என்று காத்தான் குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-4)

## அடிக்கல் நாட்டப்பட்டது

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்படவுள்ள முதலாவது சமுர்த்தி வங்கிக்கான நிரந்தரக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா வரணி சமுர்த்தி வங்கி முகாமையாளர் யோகராசா சந்திரவதனா தலைமையில் கடந்த 13 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு இடம்பெற்றது. (ப-36)

## சமாதான நடவடிக்கைகளை விரைவுபடுத்த

# 'யுத்தத்திற்கு எதிரான தேசிய முன்னணி' என்ற புதியதோர் அமைப்பு உருவாக்கம்

(கொழும்பு)

யுத்தத்திற்கு எதிரான தேசிய முன்னணி என்ற அமைப்பு சமாதான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவது தொடர்பில் தொடர் மாநாடுகளை நடாத்த திட்டமிட்டுள்ளது.

13 அமைப்புக்கள் கூட்டாக இணைந்து உருவாக்கியுள்ள யுத்தத்திற்கெதிரான தேசிய முன்னணியின் முதலாவது பிராந்திய மட்ட மாநாடு அடுத்த மாதம் 22ஆம் திகதி அனுராதபுரத்திலும் தேசிய மாநாடு அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 26ஆம் திக்தி கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கிலும் நடாத்தப்படவுள்ளன.

இந்த மாநாட்டின் மூலம் சமாதான முயற்சிகளைத் துரிதப்படுத்துமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இந்த மாநாட்டின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான பேட்டி ரணவீரகே தெரிவித்தார்.

கொழும்பில் நடாத்தப்படவுள்ள மாநாட்டில் 5ஆயிரம் பேர் வரை கலந்துகொள்ளவுள்ளனர்.

கடந்த இரு தசாப்தகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் தமிழில் வெளியான முக்கிய படைப்புக்களை சிங்கள மொழியில் வெளியிடுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நூலின் மூலம் வடக்கு -கிழக்கு மக்கள் யுத்தத்தினால் அனுபவித்த கொடுமைகள் குறித்து சிங்கள மக்கள் இலகுவாக அறிந்துகொள்ளமுடிமொன்றும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ந-4)

# உள்ளூர் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

உள்ளூர் கைத்தொழில்களுக்குப் பொருத்தமான ஸ்தானத்தை வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் விரும்புகின்றதென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நோக்கங்களை நிறைவேற்றும் முயற்சிகளில் சிறியரக கைத்தொழில் முக்கிய பங்கை ஆற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை உற்பத்திகளுக்கு சர்வதேச சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் கூடுதல் வேலை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வதற்கும் உள்ளூர் கைத்தொழில் அதிபர்களுக்கு உதவிகள் வழங்கப்படுமென பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம உரையாற்றுகையில்,

உள்ளூர் கைத்தொழில் அதிபர்கள் தமது உற்பத்திப் பொருட்களைக் காட்சிக்கு வைத்து கூடுதலான ஏற்றுமதி கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும் வகையில், மற்றுமொரு கண்காட்சிக்கூடம் அடுத்த ஆண்டு அமைக்கப்படுமென தெரிவித்தார். (ந-4)

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள் 23,500பேருக்கு நிரந்தர நியமனம்

(திருகோணமலை)

இவ்வருட இறுதிக்குள் நாட்டிலுள்ள 23ஆயிரத்து 500 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சேவை நிரந்தரமாக்கப்படவுள்ளதாக இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகம் டபிள்யூ ஜி.மித்திரரத்ன தெரிவித்துள்ளார்.

கல்வித்தகமையைப் பூர்த்தி செய்யாத சில சமுர்த்தி உத்தியோகத்தர்களின் சேவையை உறுதிப்படுத்துவதினாலேயே தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும்,

அவர்களுக்கு இரு வருடத்திற்குள் இத்தகமையைப் பூர்த்தி செய்ய அவகாசம் வழங்கப்படுமென்றும் அவர் மேலும் கூறினார்.

கடந்த 8 வருடங்களில் 5ஆயிரம் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# பொலிஸ் கான்ஸ்டபிள் நீரில் மூழ்கி மரணம்

(மட்டக்களப்பு)

கல்முனை கிட்டங்கி தாம்போதி பாதையூடாகப் பயணம் செய்த சவளக்கடை பொலிஸ் நிலையப் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தின் போது அக்கரைப்பற்றைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பாலா (வயது41) என்ற பொலிஸ் கான்ஸ்டபிளே உயிரிழந்தவராவார்.

விடுமுறையில் தனது வீட்டிற்குச் சென்றுவிட்டு கடமைக்குத் திரும்பும்போதே கிட்டாங்கிப் பாதையில் நீரினால் அடித்துச் செல்லப்பட்டார். இவரது சடலம் இதுவரை கண்டெடுக்கப்படவில்லை. மண்டூர், சவளக்கடை பொலிஸார் இயந்திரப் படகுமூலம் இவரது சடலத்தினைத் தேடி வருகின்றனர். (ச.4)


# தமிழ் மாணவர்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் நடாத்தும் உயர் தேசிய தகவல்தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியைக் கற்பதற்கு தமிழ்மொழிமூல மாணவர்களுக்குப் போதுமான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டிலுள்ள 17 உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் யாழ்ப்பாணம், அம்பாறை, மட்டக்களப்பு, சம்மாந்துறை, திருகோணமலை ஆகிய 5 நிறுவனங்களே வடக்கு மற்றும் கிழக்கில் உள்ளன.

மேற்படி பாடநெறி அக்மீமன என்ற இடத்திலுள்ள லபுதுவ உயர் தேசிய உயர் தொழில்நுட்பக்கல்லூரியில் மட்டும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (க-5)



ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட டாக்டர் செ.சுந்தரமூர்த்தி உரையாற்றுவதையும், விழாமேடையில் மன்றத்தின் செயலாளர் ச.சத்தியசீலன், பாலர் பாடசாலை முகாமையாளரும், மன்றத் தலைவருமான பா.இரகுவரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# உள்ளூராட்சி அமைப்புகளுக்கான நிதியொதுக்கீட்டுத் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை அடுத்த ஆண்டு தொடக்கம் 44கோடி ரூபாய்க்கும் கூடுதலான தொகையாய் அதிகரித்துள்ளது.

மேற்படி நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளக் கொடுப்பனவுகளுக்காக வழங்கப்படும் பணத்தினை அரசாங்கம் எந்தவகையிலும் குறைக்கவில்லையென அமைச்சர் ஜனக பண்டாரதென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நிதி ஆணைக்குழு ஒதுக்கீடுகளை 40 சதவீதத்தால் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை ஆட்சேபிக்கும் வகையில், கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்தோருக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், உளளூராட்சி அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைச்சரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

அரசாங்கம் இந்த நிறுவனங்களை மேலும் வலுப்படுத்தவே விரும்புகின்றது. நிதி ஒதுக்கீடுகளை குறைக்கும் எண்ணம் எதுவும் கிடையாது என அவர் மேலும் உறுதியளித்தார். (ந-4)

# குடிநீர்க் கொள்கலன்கள் வழங்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

சங்கானை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தாழ்நிலப் பிரதேசங்களுக்குக் குடிநீர்க் கொள்கலன்கள் வழங்கப்படவுள்ளன.

அதாவது, தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக சங்கானை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சில தாழ்நிலப் பகுதிகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் கிணற்று நீருடன் வெள்ளநீரும் கலந்துள்ளமையால் அப்பகுதி மக்கள் குடிநீரைப் பெறுவதில் பெரும் இடைஞ்சல்களை எதிர்நோக்கியுள்ளார்கள். இதனைக் கருத்தில் கொண்டே சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள பாதிக்கப்பட்ட மூன்று கிராமங்களுக்கு ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய 3 குடிநீர் கொள்கலன்கள் யாழ். செயலகத்தினால் வழங்கப்படவுள்ளன. (ந-19)

# இலவச மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அரியாலை வாழ் மக்களின் நன்மை கருதி, யாழ்.அரிமாச்சங்கம் இலவச மருத்துவ முகமொன்றை நடாத்த முன்வந்துள்ளது.

இம் மருத்துவமுகாம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணி முதல் பிபகல் 1.00 மணிவரை அரியாலை ஸ்ரீபாவதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இதன்போது கண் பரிசோதனை உட்பட சகல நோய்களுக்குமான ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும். அரியாலை வாழ் மக்கள் அனைவரையும் இவ்இலவச சிகிச்சை மருத்துவ முகாமில் பயன்பெறுமாறு அரியாலை அபிவிருத்திச் சங்கம் கேட்டுள்ளது. (ந-5)

# உலக வங்கியின் உதவியுடன் யாழில் 14, 480 வீடுகள் நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியினால் எதிர்வரும் 2005ஆம் ஆண்டளவில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் 46ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கஸ்ரப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகள் உலக வங்கியினால் கட்டிக் கொடுக்கப்படவுள்ளது.


இவற்றுள் 14ஆயிரத்து 480 வீடுகள் யாழ் மாவட்டத்தில் கட்டிக்கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-19)

# ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

வை.எம்.சி.ஏ.இன் வருடாந்த ஒளிவிழா நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப3.30 மணிக்கு யாழ்.வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன், அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு அங்கத்தவர்களுக்கான வருட இறுதி ஒன்றுகூடலும் நடைபெறவுள்ளது. (ந-19)



பருத்தித்துறை சத்திய சாயி சேவா நிலையத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் வடபிராந்திய சத்திய சாயி சேவா நிலைய இணைப்பாளர் செ.விவஞ்ஞானம் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் வடபிராந்திய சத்திய சாயி சேவா நிலைய இணைப்புக்குழுத் தலைவர் ர.வசந்தசேனன், மற்றும் நிலைய உறுப்பினர்கள், பக்தர்கள் ஆகியோரையும் படத்தில் காண்க.

படங்கள்:- வியாபாரிமூலை செய்தியாளர்

# மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

**வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்** **11**

"ஸ்ரீமத் காவேரி யாஹ தக்ஷிண தீரே
ஸமுத்திரஸ்ய பஸ்சிமதடே பாஸ்கர க்ஷேத்ரேதுர
கானன விமோசனபுரே அஸ்யதேவ தேவஸ்ய
மஹாவல்லி கஜவல்லி ஸமேத ஸ்ரீ சுப்பிரமண்ய
பரமேஸ்வரஸ்ய...."

துரகானன விமோசனபுரரே என வடமொழியில் வழங்கப்பட்ட இவ்விடமே அதே பொருள்பட மா-விட்ட -புரம் எனத் தமிழில் வழங்கலாயிற்று. (மாவிட்ட-புரத்திருத வரலா.பக்17) துரகம், மா என்பன குதிரை என்னும் பொருளாம். நிற்க,

றோமன் கத்தோலிக்க பாதிரியார் சுவாமி ஞானப்பிரகாசர் யாழ்ப்பாண வைபவ விமர்சனம் என்னும் தம் நூலில் 12ஆம் பக்கத்தில் மாவிட்டபுரம், கீரிமலை என்று தலைப்பிட்டுப் பொருள் உரைக்கின்றார். அவர் கூற்றாவது "மாவிட்டபுரமென யாழ்ப்பாணச் சரித்திராசிரியர்கள் தமிழடைவு கொடுத்தெழுதிய பெயர் பரவை வழக்கிலுள்ளபடி மாவட்டபுரம் என்றிருத்தலே பொருத்தமானது... சிங்களத்தில் மாவட்டம் என்பது மஹாவட்ட அதாவது பெரிய ஆலமரம் எனப் பொருள் தந்து நிற்கும், மா என்பது மாவத்தை முதலிய சிங்கள இடப்பெயர்களிலும் வருவது வட்ட என்னும் சிங்களச் சொல் பகுதி... புரம் என்பது தமிழிற் போலச் சிங்களத்திலும் தற்சமமாய் வழங்குகின்ற நகர் என்னும் பொருளுள்ள சமஸ்கிருதச் சொல்லாகும். மாவிட்ட புரத்தையொட்டிய வையாபாடல் ஆசிரியர் முதலானோரும் குதிரைமுகம் விட்ட கதையைச் சிருட்டித்துப் பேசினார்" என்பதே.

**கீரிமலை** என்னும் இடப்பெயர் சிங்கள உற்பத்தி உடையாததல் வெளிப்படும். கீரி என்பது கிரி என்னும் சிங்களச் சொல்லின் பகுதி இனிக் கீரிமலை இரு பெயரொட்டாகலாம் இக் கருத்துரைக்கு என்ன முடிவு. இதன் பெறுமதி இதைச் சொன்னவர்க்குக் கூட விளங்கியிருக்காது விளங்கினால் அவர் சொல்லியிருக்க மாட்டார். ஒரு மனிதன் தன் வாழ்க்கை எல்லையில் 100 வருடம் வரை வாழ்ந்தான் என்றால் அவன் அந்த 100 வருட எல்லைக்குள்ளே ஒரு சம்பவத்தை நான் கண்டேன் என்று சொல்லலாம். அவன் தன் வாழ்நாளில் சில பழங்கதைகளைச் செவிவாயால் தகப்பன் சொன்னது, பேரன் சொன்னது நான் கேட்டேன் எனலாம். அது தான் கர்ணபரம்பரைக் கதை காது வழியால் கேட்டு வந்த கதை. அக் கதைக்கும் ஒரு 50 ஆண்டுகள் அவன் தன் வாழ்நாள் எல்லைக்கு முற்பட்ட கதையைத் தெரிந்திருந்தான் எனலாம். ஆகையால் ஒருவன் 150 வருடங்களுக்கு முற்பட்ட சங்கதியைச் சொல்ல எப்படி இயலும். வைபவமாலை இக் கீரிமலை ,மாவிட்டபுரம் என்னும் சொற்கள் அவ்வத் தலைவர்கள் வாழ்ந்து தொடர்புபட்ட காரணங்களால் வந்த காரணப் பெயர் என்று சொல்கிறது. இவர்கள் அதற்கு அகராதிச் சொற்பொருள் விரிக்கிறார்கள் தம் வாயாலே. மாருதப்பிரவாகவல்லி காலம் கி.பி.785 வரை, இவர்காலம் 20ஆம் நூற்றாண்டு எனவே 1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட காரணப் பெயர்க்கு இவர் தம் வாயாதாரமாகச் சொன்னால் அவை மறுக்கப்படுமா, இவர்கள் ஒரு ஆதாரம் காட்டியும் மறுக்கவில்லை. இவர்கள் மறுப்புக்கு ஆதாரம் காட்ட இவர்களால் இயலாது. என்னையெனின் ஆதார நூல்கள் கூற்றுக்கு மாறாக இன்னொரு ஆதாரம் எடுக்கவும் இயலாது நிற்க.

ஆதார நூல்களைப் பற்றி இவர்களுக்குக் குண்டலான விளக்கக் குறைவே இவர்கள் இவ்வாறுரைக்கக் காரணம் என்க இவ் வைபவமாலை யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலச் சரித்திரத்துக்கு உயிர். இவ் வைபவமாலை இல்லையேல் யாழ்ப்பாணத் தமிழ் அரசர் கால அரசர் அட்டவணையே இல்லை. இன்னும் இவ்விளக்கம் என்னையெனின் ஒரு நாட்டின் ஒரு காலத்தில் ஒரு வாழ்ந்த அறிவாளிகளிற் சிலர் அந் நாட்டில் பின்வரும் சந்ததியினர்க்கு அன்றி பின்வரும் நாட்டவர்க்குத் தாம் அறிந்துள்ளவைகளை அறிவிக்க வேண்டும் என்று சொல்லி வைப்பதும் உண்டு. அது வருங்காலத்தவன் ஆசையைத் தீர்க்க அவர்கள் மாட்டெழுத்த ஆசை. அதாவது பின் வருங்காலத்தவனுக்கு அவர் இட்ட அறிவுப் பிச்சை. அப்படி முன்னுள் ளவர்கள் சொல்லி வைக்காவிட்டால் ஒருவன் தன் நாட்டு முன் சரித்திரத்தை அறியமாட்டான். உதாரணமாக யாழ்ப்பாணப் பட்டினத்திலே ஒரு நூல் நிலையமிருக்கு அந் நூல் நிலையத்தின் அடிப்பக்கத்திலே இந்நூல் நிலையம் 1946 ஆம் ஆண்டில் A ஜாம் சபாபதியால் அத்திவாரம் இடப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது. இப்படியே யாழ்ப்பாணம் ஆசுப்பத்திரிக் கட்டடத்திலே இக் கட்டிடம் உள்நாட்டு மந்திரி A மகா தேவாவால் அத்திவாரம் இடப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கு ஏன் இப்படி அந்நூல் நிலையக்காரர் எழுதினார்கள் ஆசுப்பத்திரிக்காரர் எழுதினார்கள் வருங்காலத்தவன் அன்றிப் பிறருக்கு அந்நூல் நிலையம் எப்போ கட்டப்பட்டது என்றோ அவ்வாசுப்பத்திரி எப்போ கட்டப்பட்டதென்றோ அறிய ஆசை ஏற்படும். தாகம் ஏற்படும். அந்த ஆசை அந்தத் தாகத்தைத் தீர்க்க உதவப்படும் பொருட்டு முன்கூட்டியே அறிந்து எழுதி இருக்கிறார்கள். அது அவர்கள் பின்னவுனுக்கிட்ட சரித்திரபபிச்சை அவ்வாறேதான் வைபவ மாலைக்காரரும் கீரிமலை மாவிட்டபுரப் பெயர்களின் வரலாற்றைச் சொன்னார் என்றறிந்து கொள்ள வேண்டும் அங்ஙனமாயின் என்னை பிறர் வைபவமாலையிலே குறை சொல்லுகிறார்கள என்னின் நன்று சொன்னாய். தம்பிழையான ஆராய்ச்சியைச் செய்து பிழையான முடிவைப் பெற்றுக் கொண்டவர்கள்தான் அப்பிழைக்கு வைபவமாலை இடங்கொடுக்காமையாலே வைபமாலையைக் குறைகூறுகிறார்கள். அவர் தம் பிழையைத் தாம் உணர்ந்து கொள்ள இயலாதவர்கள் என்க. வைபவமாலையில் ஒரு அனுவும் பிடுங்கிக் கொள்ள இயலாது. இந் நூலில் அவ்வுண்மை விசித்திரமாகப் பின்னால் விளக்கப்படுகின்றது. எனவே வைபவமாலைக் கூற்றுக்களை நாம் அறிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அந் நூலை எழுதித் தந்த மகாபுருடனை- அறிவுபகாரியை நாம் போற்ற வேண்டும் அந்நூல் இல்லையேல் யாழ்ப்பாணச் சரித்திரமுமில்லை, யாழ்ப்பாணத் தமிழரசர் புட்டியலும் இல்லை. ஞானப்பிரகாசர் அல்ல எந்த மேதாவிகளும் ஆதார நூல்கள் சொல்வதைக் கேட்டு அவற்றின் வழியே ஒரு அனுவும் பிசகாது தம் நூலை எழுதினால்தான் நாட்டு மக்களுக்கு உண்மையை உணர்த்த முடியும் அல்லாத நூல்களை அவர்கள் நம்பிப் போனால் அவைகள் பொய்யான முடிபுகளுக்குக் கொண்டு போய் விடும். நம்முடைய எழுத்துக்கள் முதல் நூலுக்கு எந்த வழியாலும் இடராய் இருத்தல் கூடாது. அப்படியானால் எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் என்ற பழிக்கு ஆளாக வேண்டி வரும் .நிற்க ஞானப்பிரகாசர் இப்போ அச் சொற்களுக்குப் புதுப்பொருள் கண்டால் முன்னர் நடந்து முடிந்த நிகழ்ச்சிகள் இல்லாமல் போய்விடுமா? இவர்களுக்குத் தானும் தான் இவ்வாறு சொல்வது பிழை என்று அவர் புத்திக்கெட்டி இருக்காது. நிற்க இவர்கள் கூற்றுப் பொய்ப்படுவதையும், வைபவ மாலைக் கூற்று மெய்ப்படுவதையும் இந்நூலில் ஞானப்பிரகாசரும் நூலாய்வும் என்ற பக்தியுள் விளக்குவாம். வைபவமாலை கைலாயமாலையில் ஓர் அனுவும் யாராலும் பிடுங்க இயலாது. மாறுபட்டவர் எல்லாரும் வீழ்வர் நிற்க. உத்தேசம் கி.பி. 795ஆம் ஆண்டு வரை இப்பெயர்களின் காலம் எனலாம்.

(தொடரும்)

---

கிளி. வெள்ள நிவாரணத்திற்கென

## 4.5 மில்லியன் ரூபா நிதி வழங்குமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதறகென கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் 4.5 மில்லியன் ரூபா நிதியினை ஜனாதிபதி செயலகத்திடம் கோரியுள்ளார்.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும்மழையால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுப் பிற்பகல் 4.00 மணிவரை 9 ஆயிரத்து 238 குடும்பங்கள் தத்தமது குடியிருப்புக்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளன.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 122 குடும்பங்களும், கண்டாவளையில் 2 ஆயிரத்து 323 குடும்பங்களும்,பளை பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 831 குடும்பங்களும்,பூநகரியில் ஆயிரத்து 562 குடும்பங்களும் இடம் பெயர்ந்துள்ளன.

இதைவிட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிப்படைந்துள்ள நிலையில் குடியிருப்புக்களிலேயே தங்கியுள்ளதாகத தெரியவருகிறது. மேலும் பல குளங்கள் நிரம்பி வான் பாய்வதால் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

(ற)

## பொறுப்பதிகாரிகள் இல்லாமல் இயங்கும் பொலிஸ் நிலையங்கள்

(கொழும்பு)

இலங்கையில் நூறுக்கும் மேற்பட்ட பொலிஸ் நிலையங்கள் நிலையப் பொறுப்பதிகாரி இல்லாமலேயே இயங்கி வருவதாக பொலிஸ் தலைமையகத் தகவல் தெரிவிக்கின்றன.

அண்மையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், உதவி பொலிஸ் அத்தியட்சகர் போன்ற உயர் பதவிகளைப பெற்றுச் சென்றமையினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தற்போது நூறிற்கும் மேற்பட்ட பொலிஸ் நிலையங்களில் உதவிப் பொறுப் பதிகாரிகளே, பொறுப்பதிகாரி களுக்குரிய கடமைகளை மேற் கொள்கின்றனர்.

ஆயினும் நிலையப் பொறுப்பதிகாரிகள் இல்லாமையினால் பல காரியங்கள் முற்றுப் பெறாமல் தேங்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத் துடன், இத்தகைய பொலிஸ நிலையங்களில் தற்போது கடமையிலுள்ள உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையினால் அவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவ தாகவும் கூறப்படுகிறது.

(க-7)

## ஷாருக்கான் குழுவினரை மீண்டும் இலங்கைக்கு அழைக்க வேண்டும்

**ஜே.வி.பி.தெரிவிப்பு**

(கொழும்பு)

ஷாருக்கானை மீண்டும் இலங்கைக்கு அழைத்து உபசரித்து குண்டு வெடிப்பினால் இலங்கையின் நற்பெயருக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தை இல்லாதொழிக்க வேண்டும் என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அக் கட்சி அறிகையொன்றையும் விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கும்-இந்தியாவுக்கும் இடையிலான உறவை சாகுலைக்க வேண்டும் என்பதில் சிலர் கங்கணம் கட்டி வருகினறனர்.

அவர்களுக்கு உதவியளித்து நாட்டை சிக்கலுக்குள்ளாககுவதற்கெனறே சில கட்சிகள் இருக்கின்றன.

இதேவேளை, ஷாருக்கான் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியொன்றில் இலங்கையில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் எதிர் பார்க்க முடியாத பயங்கரமான ஒரு நிகழ்வு என்றும் இதனால் இனிமேல இலங்கையின் பக்கமதலை வைத்தும் படுக்கமாட்டேன் என்றும் தெரிவித்துள்ளார்.

எனவே ஷாருக்கான் உட்பட சகல திரை நட்சத்திரங்களையும் நல்லதொரு சூழ்நிலையில் மீண்டும இலங்கைக்கு அழைத்து இலங்கையர்கள் தீவிரவாதிகளோ மதவாதிகளோ அல்ல என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க)

## மக்கள் வங்கிகளின் ஒளிவிழா இன்று கொழும்பில் நடைபெறும்

**முதன் முதலாக யாழ். கிளையும் பங்குபற்றுகிறது**

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்கள் வங்கியினா, இறைவன் உலகுக்கு தந்த சமாதானத்தை "கண்ணுக்குத தெரியாத சுவர்" என்ற வார்த்தைகளற்ற நாடகம் மூலம் கொழும்பில் இன்று வெள்ளிக்கிழமை இலங்கையிலுள்ள மக்கள் வங்கிகள் அனைததும் இணைந்து நடாத்தும் "ஒளிவிழா" நிகழ்வில் மேடையேற்றவுள்ளனர்.

இநநிகழ்வில் கலந்துகொள்வதறகாக சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட வங்கி ஊழியர்கள் கொழும்பு செல்கின்றனர். யாழ்ப்பாண மக்கள் வங்கியினர் முதல் தடவையாக கொழும்பில் இவ்வாறான நிகழ்வில் பங்குகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் யாழ். திருமறைக் கலாமன்ற அனுசரணையுடன் கலா பூஷணம் ஜி.பி.பேர்மினஸ் நெறிப் படுத்தியுள்ளார். மக்கள வங்கி கிறிஸ்தவ ஒன்றியம இவ் ஏற்பாட்டினைச் செய்துள்ளது.

(ற)

## எம்.ஜி.ஆரின் 17 ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் முன்னைய அரசுகளின் மனிதநேய மீறல் சம்பவங்களால் இன்னலுற்ற ஈழத்தமிழர்களின் அவலக்குரல் கேட்டு எம் மக்களின் விடிவிற்காய் உரிமைக்குரல் கொடுத்தவரும்,தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆக்கமும்,ஊக்கமும் கொடுத்த செயல் வீரரும், எம்மோடும் எமது தாயக விடுதலை உணர்வோடும் இறுதிவரை உறுதியாய் நின்றவருமான மக்கள் திலகம், பொன்மனச்செம்மல், தமிழக முன்னாள் முதல்வர் முனைவர் அமரர் எம்.ஜி.ஆரின் 17ஆவது ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 24,25,26ஆம் நாட்களில் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறவுள்ளன.

அன்றைய நாள்களில் பொது நிறுவனங்கள் எம்.ஜி.ஆர். திருவுருவப் படத்திறகு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறு எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகத் தலைவர் வ.இ செல்வக்குமார் கேட்டுள்ளார்.

(ற)

# விக்கினங்கள் போக்கும் விநாயகர் விரதம்

## வெள்ளிநற்சிந்தனை

### இன்று விநாயக சஷ்டி விரதம்

மிகவும் சுலபமாக அணுகி அருள்பெறக்கூடிய தெய்வம் விநாயகமூர்த்தி. விநாயகர்



இல்லாத கிராமமே இல்லை. இலங்கையில் சைவர்கள் மட்டு மன்றி பௌத்தர்களும், அவரை வணங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவரைப் பூசிக்கும் பொழுது மிகவும் சுலப மாக உருவாக்கி வழிபட சாஸ் திரம் அனுமதிக்கின்றது. மண், மஞ்சள், பசுச்சாணம் இவற் றைப் பிடித்துவைத்து அறுகம் புல் சாத்தி அவரை எண்ணி வழி படலாம. இவை தவிர கருங்கல், வெள்ளைச் சலவைக்கல், பளிங்கு, செம்பு, பவளம், முத்து, யானைத் தந்தம், வெள்ளெருக்குவேர், அத்திமரம், அரைத்த சந்தனம் ஆகியவற்றைக் கொண்டு அமைத்தும் வழிபடலாம், விநா யகர் தத்துவமயமான தெய்வம்.

இவர் ஓம்காரம் என்னும் பிரணவ சொரூபி. கணங்களுக் கெல்லாம் தலைவரானதால் 'கணபதி' என்றும், விக்கினங் களைப் போக்குவதால் 'விக் னேஸ்வரன்' என்றும், தனக்கு ஒரு தலைவனில்லாதலால் 'விநாயகன்' என்றும் அழைக்கப் படுகின்றார்.

விநாயகர் வடிவம் என்பது முழுமையான ஆண்மீகத் தத்து வங்களை உள்ளடக்கிய வடி வம், பேழைவயிறு உலகம் யாவற்றையும் தம்முள் அடக்கி இருபபதைக் காட்டுகிறது. ஐந்து திருக்கரங்கள் - மேலே உள்ள வலது கரம் அங்குசததையும். இடது கரம் பாசத்தையும், கீழே உள்ள வலது கரம் ஒடிந்த ஒற் றைத் தந்தத்தையும், இடது கரம் மோதகத்தையும் தாங்கி உள்ளன. தும்பிக்கை நுனி வளைந்து சுருட்டிக்கொண்டு இருக்கின்றது. பிள்ளையார் சுழி போடுவதில் பாதியாக இருக் கின்ற வளைசல் பூரணமாகி விட்டால் முழுவட்டம் பூலோக மும் பல லோகங்களும் நட்சத் திர மண்டலங்கள் அடங்கி யுள்ள பிரமாண்டமும் எல்லாமே வட்ட மானவை தான். அ்.தா வது தோற்றத்துக்கு அப்பால் இருப்பது பூரணம். தோற்றத் துக்கு வந்திருப்பது பூரணம், பூரணமே யாண்டும் உள்ளது. இந்த வாக்கு மூலத்தில் உபநிஷ தத் தின் உட்கருத்து அனைத்தும் வந் தமைகிறது. பகவத்கீதையினு டைய போக்கும் இத்தகையதே.

பிள்ளையார் சுழி போடா மல் சைவர்களாகிய நாம் ஒரு காரியத்தையும் தொடங்குவ தில்லை. இச் சுழிக்குத் தனி ஒலி இல்லை. எனவே இதனை மௌனாக்கரம் என்பர். நாம் எழுதப்போகும் விடயங்கள் சுழித்துப் போகாமல் இருக்க வேண்டுமென அறிவுக்கடவுளா கிய விநாயகரை முதல் வணங் கிப் போடுவதே பிள்ளையார் சுழியாகும்.

மேலும், நாம் எந்தக் கோயில் களுக்குச் சென்றாலும் முதல் வணக்கம், பிள்ளையருக்கே செலுத்துகின்றோம். அ்.தாவது தெய்வங்களிலே விரைந்து மனமிளகி வேண்டியதைக் கொடுப்பவர் விநாயகர், இடை யூற்றை நீக்கும் ஆற்றல் உடை யவரே விநாயகர், ஆதலில் இவர் தம்மை வழிபடுவோர்க்கு இடை யூற்றைப் போக்குதலும், வழிப டாதோருக்கு இடையூற்றை ஆக்குதலும் செய்பவராகின்றார். இதுபற்றி இவருக்கு 'விக்கின விநாயகர்' 'விக்கினராசா' 'விக் கினேசுரர்' என்னும் திருப்பெயர் களும் உளவாயின.

விநாயகர் பூசை செய்யாமல் சிவபெருமான் திரிபுர தகனத் துக்குப் புறப்பட்டதால் கோப மடைந்த விநாயகர் தேரின் அ்சை முறித்து விட்டாராம், விக்கினத்தை உண்டாக்கிய விநாயகர், விக் கினத்தைப் போக்கி உதவிய தால் தான் திரிபுர தகனம் சாத்தியமாயிற்று இக்கூற்று.

"முப்புரம் எரிசெய்த அச் சிவன உறைரதம் அச்சது பொடி செய்த அறிதீரா" என்பதால் விளங்குகிறது. எல்லாப் படை களையும் உடைய விநாயக ருக்கு வாகனம் பெருச்சாளி என்பதே சிறப்பாகக் காணப்படுவதாயி னும் மயிலும், சிங்கமும் வாகனங் களாக உடையவர். பிள்ளை யாருக்குச் செலுத்தும் வணக் கம் மற்றைய தெய்வங்களின் வணக்கங்களிலும் வேறுபட்ட தாகும், பிள்ளையாரை வணங் கும் போது தோப்புக்கரணம் போட்டு வழிபடுகின்றோம். அவருடைய சந்நதியில் தான் சிதறு தேங்காய் உடைக்கின்ற பழக்கம் இருக்கின்றது.

அநாதியாகவும் நிர்மலமாக வும், அகண்ட ஆனந்த உருவா கவும் இருந்து அழிவினுக்கும் அழிவு, செய்யவல்ல விநாயகரி னார் கருணையில்லா விட்டால் எத்தகைய அறிவாளியாகவும் வல்லமையானராகவும் இருந்த போதிலும் அவர்கள் எடுத்த காரியம் நிறைவேறாது. எனவே இந்திரன், பிரமனும், திருமாலும், ருத்திரரும் அந்த விநாயகரின் ஆஞ்ஞையை மீறாமல் அவரைத் தொழுகின்றார்கள். அத்தகைய தலைமைக் கடவுளான விநாய கரை விரதமிருந்து வணங்குவ தற்கு சதுர்த்தி, சங்ஹடர சதுர்த்தி போன்ற விரதங்கள் உண்டு. அவற்றுள்'பிள்ளையார் நோன்பு' என்று தனியான விரதம் ஒன்று உண்டு. இதை 'குமார சஷ்டி' விரதம் என்று சொல்லு வார்கள். இது கார்த்திகை மாதம் தேய்பிறை பிரதமை முதல் மார் கழி மாதம் வளர்பிறை சஷ்டி திதி வரையில் இருபத்தொரு நாட்கள் அனுஷ்டிக்கப்படும் விரதமாகும். சஷ்டி தொட்டு சதயம் விட்டு என்பது பழமொழி.

நோன்பு நோற்பவர் இருபத் தொரு இழைகளால் ஆகிய நூலைக் காப்பாக அணியவேண்டும். ஆண்கள் வலது மணிக்கட்டிலும் பெண்கள் இடது மணிக் கட்டி லும் அணிந்து கொள்ளவேண்டும்.

பதினென் உபபுராணங்களில் தலைமையாக விளங்கும் பார்க் கவ புராணத்தில் பிரணவப் பொருளாகவும், அப் பிரணவத் திலின்றும் வேறுபட்ட பேதப் பொருளாகவும் பேதா போதப் பொருளாகவும், இவைகள் அனைத்தையும் கடந்து நிற்கும் ஏகத்துவப் பொருளாகவும், பிரம் மானந்த ரூபமாகவும் விளங்கும் விநாயகப் பெருமானின் மகிமையை உணர்ந்து அவரை வணங்கித் திருமணம், வித்தை, கல்வி, சயம், சுகம், யாகம், போராட்ட வெற்றி முதலான அனைத்தையும் பெற்றுப் புகழும் பெருமையும் பெறுவோமாக. □

த.காசிநாதன்

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாட சாலைகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஒதுக் கீடுகள் சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 19 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந் துக் கல்லூரியில் இடம்பெற வுள்ளது.

இதில் பாடசாலை மட்டத்தில தயாாிக்கப்பட்ட அபிவிருத்தி திட் டங்கள் குறித்து ஆராயப்படும்.

இதேவேளை, இம் மாதம் 24, 26ஆம் திகதிகளில் நடைபெற விருந்த தென்மராட்சிப் பாட சாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடலும் அன்றைய தினத்தில் இடம்பெறும். (ப-29)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலு வல்கள் திணைக்களத்தின் யாழ.மாவட்ட அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நாவ லர் மணிமண்டபத்தில் நடாத்தி வரும் தொடர் ஆன்மீகச் சொற் பொழிவில், இன்று வெள்ளிக் கிழமை பி.ப.6.00 மணிக்கு 'வாசகரும் வாசகமும்' எனும் விடயம் பற்றி சைவப் புலவர் சு.செல்லத்துரை சிறப்புச் சொற் பொழிவாற்றவுள்ளார். (ற)

## கொடுப்பனவு வழங்கல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்விவலயப் பணிமனையால கடந்தமாதம் 28,30 ஆம திகதிகளில் நடத்தப் பட்ட பாடசாலைமட்டக் கணிப் பீட்டுச் செயலமர்வுகளில் பங்கு கொண்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப் படவுள்ளன.

இதனை எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் தென்மராட்சி வலய கல்விப் பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறு அறி விக்கப்பட்டுள்ளது. (ப-29)

## கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச செய லக சமுர்த்தி மகா சங்கக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு தெனமராட்சி மகா சங்க அலுவலகத் தில் நடைபெறவுள்ளது. (ப-36)

# கொலை அச்சுறுத்தல் காரணமாக போலி உறுதி வழக்கில் சாட்சியளிக்க கையெழுத்து நிபுணர் மறுப்புத் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவப் பேச் சாளர் சுமேத்தா பெரோரா, சட் டத்தரணிகள் சங்க முன்னாள் செயலாளர் பந்துல விஜயசிங்க மற்றும் சரத் விஜேயவர்த்தன ஆகியோருக்கு எதிரான கொட்டா வீதி போலி உறுதி வழக்கில் தம்மால சாட்சியம் அளிக்க இயலாதிருப்பதாகவும், கொலை அச்சுறுத்தல் கிடைக்கப் பெற் றிருப்பதனால் இலங்கைக்குத் தான் வருவது சாத்தியமாகா தெனவும் கையெழுத்துத் துறை நிபுணர் பேராசிரியர் பி.சந்திர சேகரன் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் பி.சந்திரசேக ரன் இந்தியாவின் சட்ட மருத் துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரதம ஆலோசகராகக் கடமை யாற்றி வருகிறார்.

இவ் வழக்கில் இராஜகிரிய கொட்டா வீதியில் அமைந் துள்ள பிரட்றிக் ஒபயசேகராவுக குச் சொந்தமான காணி உரி மையைப் பெற்றுக் கொள்ள வென சட்டவிரோதமான முறை யில் பொய்யான ஆவணங்களை இக் குற்றவாளிகள் தயாரித் தார்களெனக் கூறப்படுகிறது.

முனனர் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது பிரட்றிக் ஒபயசேகராவின் பெறாமகனான அசோகா ருபயசேகரா, நீதிமன் றத்தில் சாட்சியமளிக்கும் போது ஆவணங்களில் காணப் படும் சந்தேகத்திற்கிடமான கையொப்பம் பிரமட்றிக் ஒபய சேகராவின் கையொப்பமல்ல என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# இந்தியாவில் இருந்து 1000 பஸ்கள் இறக்குமதியாகும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது போக்கு வரத்துச் சேவை மிகவும் மோச மான முறையில் சீரழிந்துள்ளது. இதை மீண்டும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்தியாவி லிருந்து ஆயிரம் பஸ் வண்டி களை இறக்குமதி செய்து சேவையில் ஈடுபடுத்த போக்கு வரத்து அமைச்சு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார்.

இலங்கை போக்கு வரத்து சபையினால் சுமார் ஏழாயிரம் பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்தும் தறபோது சுமார் 4 ஆயிரத்து 200 பஸ் வண்டிகள் மாத்திரமே சேவையில் ஈடுபடுகின்றன.

இதன் காரணத்தினால் போக்கு வரததுச் சேவை சீர்குலைந்து வரு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால்தான் ஆயிரம் பஸ் வண்டிகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரி வித்த அதிகாரி,

தற்போது சேதமடைந்து டிப்போக்களில் நிறுத்தி வைக் கப்பட்டுள்ள சுமார் 2ஆயிரம் பஸ் வண்டிகளை திருத்தியமைக் கும் பணிகள் துரிதமாக மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்.

இந்தியாவிலிருந்து இறக்கு மதி செய்யப்படும் பஸ் வண்டி கள் பெரும்பாலும் அடுத்த வருடம நாடளாவிய ரீதியில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இவ்வாறு புதிய பஸ் வண்டி களைக் கொள்வனவு செய்வதன் மூலமும் மற்றும் பழுதடைந்த பஸ் வண்டிகளைத் திருத்திய மைப்பதன் மூலமும் சீர்குலைந் துள்ள போக்குவரத்துச் சேவையை சீர்படுத்த முடியுமெனத் தாம் எதிர் பார்ப்பதாகவும் மேலும் நம்பிக்கை தெரிவித்தார். (க-9)

# தென்மராட்சி முன்பள்ளிகளிடையேயான போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளது

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலைய முன்பள்ளிகளுக்கிடையில் வலய மட்டத தில் நடத்தப் பட்ட பேச்சு, நடனம், சித்திரம், நாடகம் ஆகிய போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு,

### பாட்டு

1 ஆம் இடம் - ச.வித்தகன் - பாரதி முன்பள்ளி, சாவகச்சேரி.
2 ஆம் இடம் - வி.கீர்த்திகா - சிவமணி முன்பள்ளி, நாவற்குழி.
3 ஆம் இடம் - த.அபிஷாயினி - நாவலர் முன்பள்ளி, அல்லாரை, மீசாலை.

### பேச்சு

1 ஆம் இடம் - யோன்சன் - டனிஸ்சா அன்னை திரேசா முன்பள்ளி கச்சாய் வீதி - கொடிகாமம்
2 ஆம் இடம் - சி.தர்சிகா - சைவப் பிரகாச முன்பள்ளி, வரணி
3 ஆம் இடம் - பா.கௌசிகா - நாவலர் முன்பள்ளி அல்லாரை, மீசாலை.

### நடனம்

1 ஆம் இடம் - ச.நிரோஜா - சிவமணி முனபள்ளி, நாவற்குழி.
2 ஆம் இடம் - சி.தர்சிகா - சைவப்பிரகாச முன்பள்ளி, வரணி.
3 ஆம் இடம் - ப.கஸ்தூரி - பராசத்தி முன்பள்ளி, கைதடி.

### சித்திரம்

1 ஆம் இடம் - க.பிரசாத் -தென்னிந்திய திருச்சபை முன்பள்ளி, சாவகச்சேரி.
2 ஆம் இடம - த.யசிகரன் - வினோபா முன்பள்ளி, கச்சாய், கொடிகாமம்
3 ஆம் இடம் - பி.ஷம்சியா - நாவலர் முன்பள்ளி, அல்லாரை, மீசாலை.

### நாடகம்

1 ஆம் இடம் - 'ஒற்றுமை தந்த உயர்வு' நாமகள் முன்பள்ளி, சங்கத்தானை, சாவகச்சேரி.
2 ஆம் இடம் - 'எது உலகம்' கலைமகள் முன்பள்ளி மட்டுவில், சாவகச்சேரி.
3 ஆம் இடம் - 'ஞானக் குழந்தை' கொடிகாமம் மத்தி முன்பள்ளி, கொடிகாமம். (ப-29)

# பொதுக்கூட்டம்

(கல்வயல்)

அரியாலை சனசமூக நிலையத்தின் 56 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நிலையத் தலைவர் எஸ்.விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.(ப-36)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 31

சந்தனவாரி சிறிது தூரத்தில் எனக்குத் தெரிகின்றது. அங்கே போய் எப்படிச் சேரப்போகிறோம் என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டது. சேற்றிலே நடந்து காலில் அணிந்திருந்த பூட்ஸை எறிந்துவிட்டேன். அடிமேல் அடிவைத்துக்கொண்டு சந்தனவாரியை அடைந்தேன். அங்கு ஒரு ரீக்கடை இருந்தது. அந்த ரீக்கடையிலிருந்த பொஞ்சு மேல் அமர்ந்து இளைப்பாறினேன். எனக்கு முன்னேபோன அன்பர்கள் கூடாரங்கள் அமைத்துக்கொண்டு தங்கினார்கள். துறையூர் மாரிமுத்து முதலியார் என்னைத் தேடிக்கொண்டு வந்தார். நான் சேர்ந்து அமர்ந்திருப்பதைக்கண்டு என்னைக் கட்டிக்கொண்டு அழுதார். "சுவாமி! நீங்கள் சிந்தாதிரிப் பேட்டையிலிருந்து மவுண்டுரோடு போக நான்கு கார் வந்து நிற்குமே! இங்குவந்து இந்தத் துன்பத்தை அடைகின்றீரே!" என்று அழுதார். என் கையைப் பிடித்துக்கொண்டு அவர் அமைத்திருக்கிற கூடாரத்திற்கு அழைத்துச்சென்றார். அப்பொழுது இரவு 7.00 மணி இருக்கும். நான் பூசை செய்யாமல் தண்ணீர் கூட பருகமாட்டேன். அங்கு ஒரு ரீக்கடையில் ஒரு ரூபாய் கொடுத்து ஒரு சிறிய பாத்திரத்தில் வெந்நீர் வாங்கி வந்தார். ஒரு சிறிய டம்ளரினால் மொண்டு குளித்தேன். உள்ளம் உருகி, கண்ணீர் பெருகி அழுதுகொண்டே வழிபாடு செய்தேன். "முருகா! உன்னை இங்கெல்லாம்கொண்டு வந்து அலைககழிக்கின்றேனே! என்னை மன்னிக்க வேண்டும்" என்று கூறி அழுதேன். அந்த இடம் 9000அடி உயரம், குளிர் எங்களை வாட்டி வதைத்தது. கூடாரத்திற்குள் சேற்றுத்தரையில் படுக்கையை விரித்துப் போர்வீரன் கொடுத்த கம்பளிகளையெல்லாம் போர்த்துக்கொண்டு



படுத்தேன். கம்பளி போர்த்துக்கொண்டதாகவே தெரியவில்லை. குளிர் நடுங்கியது. பூசை முடிந்தவுடன் ஒரு ரூபாய் கொடுத்து சோறும் உருளைக்கிழங்கும் வாங்கிக்கொண்டு வந்தார்கள். அதை வாயில் வைத்தவுடன் குமட்டியது. அதை எறிந்துவிட்டு ஒரு கப் ரீ குடித்து விட்டுப் படுத்தேன். அணுத்துணையும் தூககம் வரவில்லை. நரகத்தில் வருந்தும் உயிரைப்போல் குளிரின் நடுக்கத்தால் விடியும் வரையிலும வேதனைப் பட்டுக்கொண்டிருந்தேன். ஒருவாறு பொழுது விடிந்தது.

காலையில் எழுந்து சிறிது வெந்நீர் தயாரித்துக்குளித்து காட்டிலுள்ள பச்சிலைகளைப் பறித்துப் பூசை செய்தேன். இரண்டு துண்டு பிஸ்கட்டு சாப்பிட்டுவிட்டு ஒரு கப் ரீ வாங்கிக்குடித்தேன்.

பனிப் புயல் வீசுவதனால் யாரும் அமர்நாத்திற்கு போகக்கூடாது என்ற அரசாங்க உத்தரவு போன் மூலம் அறிவிக்கப்பட்டது. இதனைக் கேட்டு நாங்கள அதிர்ச்சி அடைந்தோம். இத்தனை சிரமப்பட்டு வந்தும் அமரநாதரைத் தரிசிக்கும் பாக்கியம் கிட்டவில்லையே என்று உள்ளம் வருந்தினோம்.

நான் அந்த யாத்திரைக்கு முக்கிய சூத்திரதாரியாக இருக்கும் பாண்டுரங்கனைப் பார்த்து முக்கியமான அதிகாரிகளைச் சந்தித்து விஷயங்களை விளங்கிக் கொண்டுவா என்று சொன்னேன். அவர் போய் விசாரித்துவந்து "இரண்டாவது உத்தரவு வந்தாலும் வரும் எதற்கும் பொறுத்துப்பார்ப்போம்" என்றார். நொண்டிக் குதிரைக்கு சறுக்கியதே சாக்கு என்று பாதியாத்திரிகர்கள் திரும்பிவிட்டார்கள். நாங்கம் மறு உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்.

மாலை 3 மணிக்கு யாத்ரீகர் போகலாம் என்று அரசாங்க உத்தரவு வந்துவிட்டது. யாத்ரீகர்கள் மிகுந்த பரபரப்புடன் குதிரைகள் மீதும் நடந்தும் வேகமாகப் புறப்பட்டுப் போகலானார்கள்.

எனக்கு நேற்று நடந்த நடையினால் கால்கள் நடக்கும் வலிமையை இழந்து விட்டன. குதிரை மேல் போவதற்கு ஏற்பாடு செய்தார்கள். எனக்குக் குதிரைமேல் ஏறிப் பழக்கமில்லை. கரடு முரடான பாதையில் குதிரை மேல் போவதற்கும் அச்சமாக இருந்தது. குதிரைமேல் போவதைத் தவிர வேறு வழியும் இல்லை. மனதிலே துணிவை வரவழைத்துக்கொண்டேன். முதலில் சமதரையில் குதிரை மீது ஏறி சிறிது நேரம் பழகிக்கொண்டேன். உடன் வந்தவர்களெல்லாரும் தங்கள் தங்கள் குதிரைகளில் ஏறிப் போய்விட்டார்கள். நான் மரண தைரியம் செய்துகொண்டு குதிரை மேல் ஏறிப்புறப்பட்டேன். குதிரைக்காரன் அருகில் நடந்துகொண்டு வந்தான். குதிரை வழியில்லாத வழியிலும் மலைமேல் ஏறிச்சென்றது. தரை ஒரே வழுக்கல். அந்த அறிவுள்ள குதிரை ஒரு அடியை வைத்துத் தரையில் நன்றாகக் காலை வைத்துக் கொண்டு மற்றொரு காலைத் தூக்கி நிதானமாக நடந்துசென்றது. பல இடங்களில் மலை செங்குத்தாக ஏறவேண்டியிருந்தது. எந்த சமயத்தில் குதிரையிலிருந்து விழ நேருமோ என்று எண்ணிக்கொண்டே சென்றேன். இவ்வாறு ஒவ்வொரு மலையாக ஏறிச்சென்றேன். இரண்டொரு மலை உச்சியில் சுகமாக நடந்துசென்றேன் இரவு 8 மணிக்கு சேஷ்நாக் என்ற ஏரிக்கரையை அடைந்தோம். சந்தன வாரிக்கும் சேஷ்நாக்கிற்கும் 8 மைல் இடைவெளி.

### சேஷ்நாக்

சேஷ்நாக் என்பது ஒரு ஏரி. தண்ணீர் பச்சையாக இருக்கின்றது. ஆதிசேஷனே ஏரி வடிவாக இருக்கின்றான் என்பது ஐதீகம். அந்த ஏரிக் கரையில் யாதீகர்கள் கூடாரங்களை அடித்துக்கொண்டு தங்கியிருந்தார்கள். ஒருபுறம் எங்களுடைய கூடாரங்கள் அமைந்திருந்தன. கூடாரத்தில் தங்கி அனுஷ்டானம் செய்தேன் சமையற்காரர் செய்த சிற்றுண்டியை அருந்தி குளிரில் நடுங்கி ஒடுங்கிப் படுத்தோம். இந்த இடம் பதினோராயிரத்து ஐநூறு அடி உயரம. ஏரியிலிருந்து விஷக்காற்று வீசிக்கொண்டிருந்தது. அன்று இரவு நாங்க பட்டபாடு இறைவனுக்கே தெரியும்.

20-8-56 பொழுது விடிந்தது. அதிகாலையிலேயே எங்கள் குதிரைகளில் ஏறிக்கொண்டு பகல் 11 மணி அளவுக்கு 8 மைல் தொலைவிலுள்ள பஞ்சதரணி என்ற இடத்தை அடைந்தோம். வழியில் பனிக்கட்டி உருகி ஆறாக வருவதையும், பனிக்கட்டி இறுகிப் பாலமாக இருப்பதையும் பார்த்தோம். ஒரு இடத்தில் அபாயமான பனிக்கட்டிப் பாலத்திலேயே நடந்தேன்.

### பஞ்சதரணி

பகல் 12 மணிக்கு நல்ல வெய்யில் காய்ந்தது. நான் நதியி[illegible] குளிரால் நடுங்கிக்கொண்டே நீராடி, கமண்டலத்தில் தண்ணீர் எடுத்துக்கொண்டு புறப்பட்டேன், ப[illegible] வழியில் கமண்டலம் கைநடுங்கிக் கீழே விழுந்துவிட்டது. மறுபடியும் போய் தண்ணீர் எடுத்துக்[illegible]ண்டு வரும்பொழுது இடுப்பில் சுற்றிக் கொண்டிருந்த அங்கவஸ்திரப்பட்டு எப்படி நழுவிப் போய்வி[illegible]ன்றே தெரியவில்லை. பகல் 3 மணிக்குப் பூசை முடித்துச்சிறிது உணவு உண்டு இளைப்பாறிக்[illegible]டேன். 21-8-56 மற்றவர்கள் குதிரையின் மேல் போக, நான் மட்டும் நான்கு மைல் கடும் ஏற்றத்துடன் பகல் 12 மணியளவில் 4 மைல் நடந்து அமரலிங்கம் இருக்கிற இடத்திற்குப் போய்ச்சேர்ந்தேன். அங்கே பனிக்கட்டி உருகி நதியாக ஓடிக் கொண்டிருந்தது. மிகுந்த தைரியத்தை மனதில் உண்டாக்கிக்கொண்டு இரு செம்பு தண்ணீரைத் தலையில் ஊற்றிக்கொண்டு பூசை முடித்தேன். உடன் வந்த பெரம்பூர் திருநாவுக்கரசு முதலியாரைப் பார்த்து "நீங்கள் குளிக்க வேண்டாம். தண்ணீரைச் சிரசில் தெளித்துக்கொள்ளுங்கள்" என்று கூறினேன்.

அவர் என் வார்த்தையைக் கேளாமல் இரண்டு செம்பு தண்ணீர் மொண்டு தலையில் விட்டுக் கொண்டார். உடனே அவருக்குப் பட்சவாதம் வந்துவிட்டது. ஒரு கைகால் விளங்காமல் போய்விட்டது. வாய் கோணிக்கொண்டது. அவருடைய நிலைமையைக்கண்டு நான் மிகவும் வருந்தினேன். உடம்பெல்லாம் திருநீறுபூசி கம்பளியைப் போட்டுப் போர்த்தி இரண்டுபேர் கையில் பிடித்துக்கொண்டு அமரலிங்கத்தைத் தரிசிக்குமாறு செய்தேன். "சுவாமியைப் பாருங்கள், வணங்குங்கள்" என்று சொன்னேன். அவரும் சரி என்றார். ஆனால் பின்னர் அவருக்குச் சுவாமியைத் தரிசித்ததாக நினைக்கவில்லை என்று தெரிந்தது.

அமரலிங்கம் பெரிய ஒரு குகையில் இருக்கின்றது. அந்த குகை 300,400பேர் தங்குகிற அளவில் பெரியதாக இருக்கிறது. அங்கே ஒரு புறாவும் இருந்தது. அந்தலிங்கம் அமாவாசை முதல் பனிக்கட்டியால் வளரத் தொடங்குகிறது. பௌர்ணமியன்று 6 அல்லது 8 அடி உயரம் லிங்கம் வளர்ச்சியடைந்து காட்சி தருகிறது. ஆடி அல்லது ஆவணியில்தான் இந்த தரிசனம் கிடைக்கின்றது. வெள்ளை வெளேரென்று ஆறடி உயரத்தில் அந்த ஐஸ்லிங்கம் கண்கொள்ளாத காட்சியாக விளங்குகின்றது. தரை முழுவதும் பனிக்கட்டிதான். அங்கே தப்பையினால் பாதரட்சை மாதிரிச் செய்து தருகிறார்கள். அதை எல்லோரும் காலில் அணிந்து கொண்டால்தான் ஐஸ் தரையில் நின்று சுவாமி தரிசனம் செய்யமுடியும.

சென்னையிலிருந்து நான்கு நாள் ரயிலிலும், நான்கு நாள் பஸ்ஸிலும், நான்கு நாள் குதிரையிலுமாக ஆக 12 நாள் கடும் பிரயாணம் செய்து இந்த அமரலிங்கத்தை தரிசித்தோம். பனிப்புயல் வருமென்றும் சீக்கிரம் திரும்புங்கள் என்றும் காவல்துறையினர் எங்களை விரட்டினார்கள். 12 நிமிஷம்கூட எங்களைச் சுவாமி தரிசனம் செய்யவிடவில்லை. அமரநாதனை அகங்கு[illegible] கண்ணாரக்கண்டு வழிபாடு செய்தோம். இங்கிருந்து கொண்டுபோயிருந்தசந்தனம், விபூதி[illegible] வாமிக்கு அபிஷேகம் செய்து அந்த பிரசாதத்தை எடுத்துக்கொண்டோம்.

(தொடரும்)

## சம்பள அதிகரிப்புத் திட்டம் திறைசேரியிடம் கையளிப்பு

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பான அடிப்படைத்திட்டமொன்று தயாரிக்கப் பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் பணிப்பாளர்நாயகம் பி.பி.கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தத்திட்டம் அங்கீகாரம் பெறும் நோக்கில் திறைசேரியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அச்சிடுவதில் உள்ள தாமதங்களைத் தவிர்க்கும் முகமாக அரசு ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு விபரங்கள் கணனிமயப்படுத்தப் படவுள்ளன.

சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இதன் அடிப்படையிலேயே சம்பள அதிகரிப்பினை வழங்க முடியும். இந்த ஏற்பாடுகள் காரணமாக அரச நிறுவனங்கள், ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பினை அடுத்த மாதத்தில் இருந்து வழங்கக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் உட்பட ஏனைய நிறுவனங்களுக்கான சம்பள அதிகரிப்புப் பற்றிய சுற்றுநிருபங்கள் காலக்கிரமத்தில் வெளியிடப்படும் எனக் குறிப்பிட்டார். (ற-4)

## பால்மாவின் விலை அதிகரிக்கமாட்டாது

(கொழும்பு)

வர்த்தக விளம்பரங்களுக்காகச் செலவிடப்படும் நிதியை நுகர்வோரிடமிருந்து பெற்றுக்கொள்ள இடமளிக்க முடியாது என பால்மா விற்பனையாளர்களுக்கு நுகர்வோர் விவகார அதிகாரசபை எச்சரித்துள்ளது.

பாலமாவை இறக்குமதி செய்து விற்பனையில் ஈடுபட்டுவரும் நிறுவனங்கள் பால்மாவின் விலையை மேலும் அதிகரிப்பதற்கான அனுமதியை மேற்படி அதிகார சபையிடம் கோரியிருந்தன.

அதிகாரசபையின் தலைவர் எம.ஐ.எம்.மூஷின் இது தொடர்பான பேச்சுவார்த்தையின் போது பாலமாவுக்கான விலையேற்ற அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி எச்சரிக்கையையும் அவர் விடுத்துள்ளார்.

பால்மாவை வெளிநாடுகளிலிருந்து இறககுமதி செய்து சந்தைப் படுததும் நிறுவனங்கள் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் உட்பட பல வழிகளிலும் தமது வர்த்தக விளம்பர பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இதனைத் தவிர பொது நிகழ்ச்சிகளுக்கான அனுசரணைகளை வழங்குவதன் மூலம் பெருந்தொகை நிதியைச் செலவிடுகின்றன.

இதனைச் சரிசெய்யும் வகையில் பால்மாவின் விலைகளை அதிகரித்து அச்சுமையை பாவனையாளர்கள் மீது சுமத்த முனைகினறன.

இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாதென அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## பற்சிகிச்சைக் கூடங்களை பாடசாலைகளில் நிறுவ முயற்சி

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு அவ்வப் பாடசாலைகளிலேயே பற்சிகிச்சைகளை வழங்கும் முறையினை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கையை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

நாட்டில் தற்போது 10ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலைகள் இருப்பினும் 350 பாடசாலைகளில் மாத்திரமே தற்போது பற்சிகிச்சைக் கூடங்கள் காணப்படுகின்றன.

இதனால் 25லட்சத்திற்கும் மேறபட்ட மாணவர்கள் போதிய பற்சிகிச்சையின்றி உபாதைகளுக்கு ஆளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கிராமப் புறப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களே பற்சிகிச்சையின்றி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு பற்களைப் பாதுகாப்பது குறித்து விழிப்புணர்ச்சிகளை ஊட்ட தமது அமைச்சு துரித நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

## விடுமுறை தினங்களில் கடைதிறக்க அனுமதி

எதிர்வரும் நத்தார், புதுவருட பண்டிகை தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக ஸ்தாபனங்களும நாளை சனிக்கிழமை தொடக்கம் 26.12.04ஆம திகதி வரையான சனி, ஞாயிறு மற்றும் வாத்தக விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்தற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டும் எனவும் 26.12.2004ற்குப் பின் சகல ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களிலும் வர்த்தக ஸ்தாபனங்களை மூடி வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கி சகல வாத்தகர்களும ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

YOGI HOME SCIENCE ACADEMY
X' MAS DEMONSTRATION CLASSES
பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 3 நாட்கள் மட்டும்
2004 December 18,19,20ஆம் திகதிகளில் காலை 10 மணி முதல் 4 மணிவரை இலகுவாகவும், வித்தியாசமாகவும் விரைவாகவும் செய்யும் :-
- 6 கேக் கலவைகள்
- 6 பேஸ்ரி வகைகள் (Pastries)
- 6 Sweets வகைகள்
சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.
75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
(C-843)

## இந்திய கிரிக்கெற் சபைத் தேர்தல் நியாயமாக நடைபெற்றதா?

### நிரூபிக்கக் கோருகிறது உயர் நீதிமன்றம்

இந்திய கிரிக்கெற் சபைத் தலைவர் தேர்தல் நியாயமாகவும், நேர்மையான முறையிலும் நடை பெற்றது என்பதை பி.சி.சி.ஐ. நிரு பிக்க வேண்டுமென இநதிய உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பரில் நடை பெறற இத்தேர்தலில் முன்னைய தலைவர் டால்தமியாவுக்கு ஆதர வான ரன்பீர் சிங் மகேந்திராவும், மத்திய அமைச்சர் சரத் பவாரும் போட்டியிட்டனர்.

ஒரு வாக்கு வித்தியாசத்தில் மகேந்திரா வென்றார். ஆனால் சரத்பவார் ஆதரவாளர் அகேஷிற்கு வாக்களிகக அனுமதி மறுக்கப்பட் டது தொடர்பாக பிரச்சினை எழுந் தது.

இந்நிலையில் இது தொடர் பான வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி சந்தோஷ் ஹொக்டே 'பொதுமக்களால் அதி கம் கவனிக்கப்படும் கிரிக்கெற் சபையின் தேர்தலும் அவர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நியாயமான முறையிலேயே நடந் தது என்பதை பி.சி.சி.ஐ.நிருபிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் தலை வர் டாலமியா தலைமையிலான பழைய நிர்வாகிகளே தொடர்ந்தும் பொறுப்பு வகிக்கிறார்கள்.

புதிய நிர்வாகிகள் இன்னும் பொறுப்பேற்காத நிலையில் பி.சி. சி.ஐ.வழிகாட்டுக குழுத்தலைவர் பொறுப்புவகிக்கும் டால்மியாவுக்கு தொடர்ந்து அப்பதவியை வகிக்க உயர் நீதிமன்றம் விதித்த தடையை நீக்க வேண்டுமென பி.சி.சி.ஐ. தரப்பு சட்டத்தரணி கோரியிருக் கிறார். ஏனெனில் அப்பதவிக்கு எந்த அதிகாரமும் இல்லாததுடன், கிரிக்கெற் விவகாரங்களில ஆதிக் கம் செலுத்தவும முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

(து-7)

## விளையாட்டு செய்திகள்

## அதிஷ்டமில்லாத ரிச்சார்ட்சன்

முதல் தரப் போட்டிகளில் 10 ஆயிரம ஓடடங்களை எட்ட வேண் டுமென்ற மார்க் றிச்சார்ட்சனின் கிரிக்கெற் கனவு, வெறும் ஆறு ஓட்டங்களால் வீணாகிப் போனது.

நியூசிலாந்து கிரிக்கெற் அணி யின் ஆரம்பத் துடுப்பாட்ட வீர ரான மார்க் றிச்சார்ட்சன் சர்வ தேச கிரிக்கெற் போட்டிகளிலி ருந்து ஓய்வு பெறுவதாக அறிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் கான்டர் பரி அணிக்கும் ஒக்லன்ட் அணிக் குமிடையே நடைபெற்ற போட் டியே அவரது முதற்தர போட்டி யின் கடைசி ஆட்டமாக இருந் தது.

நியூசிலாந்தின் வெலிங்டன நகரில் நடைபெற்ற இப் போட்டிக்கு முன்னதாக ரிச்சார்ட்சன் முதற்தர போட்டிகளில் 9 ஆயிரத்து 959 ஓட் டங்களை எடுத்திருந்தார்.

10ஆயிரம் ஓட்டங்களை எடுக்க 41 ஓட்டங்கள் மாத்திரமே தேவை யான நிலையில் இப் போட்டியில் முதல் இன்னிங்சில் 35ஓட்டங்க ளுடன் ஆட்டமிழந்தார்.

அவரது துரதிஷ்டம் ஒக்லன்ட் அணி இரண்டாவது இன்னிங்சை ஆட வேண்டிய அவசியமே ஏற் படவில்லை. கான்டர்பரி அணி இன் னிங்ஸ் தோல்வி அடைந்தது.

வெறும் ஆறு ஓட்டங்களால் தனது கிரிக்கெற் கனவு, கனவா கவே போய்விட, ஓய்வு பெற்றி ருக்கிறார் றிச்சார்ட்சன். (து-7)

## கிரிக்கெற் தரவரிசைப் பட்டியலில் சச்சின் டெண்டுல்கர் முன்னேற்றம்

சர்வதேச கிரிக்கெற் தரவரி சைப் பட்டியலில் இந்திய நட்சத் திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண் டுல்கள் மீண்டும் முன்னேறியுள் ளார்.

முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக மூன்று மாதங்கள் விளை யாடாததன் காரணமாக பின் தங்கி யிருந்த சச்சின், பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் ஆடடமிழக்காது 248 ஓட்டங்களை எடுத்ததன் மூலம் அவ ருக்கு முன்னிலை கிடைத்துள்ளது.

தரவரிசைப் பட்டியலில் 12 ஆவது இடத்திலிருந்த சச்சின் தற்போது 6 ஆம் இடத்திற்கு முன் னேறியுள்ளார் பினரஸ்.

வோட்டர் ஹவுஸ் கூப்பர் நிறு வனம் வெளியிட்டுள்ளதர வரி சைப்பட்டியலின் படி ராகுல் ராவிட் முதலிடத்திலும் பிரையன் லாரா, ஜாக்கலீஸ் ஆகியோர் முறையே இரண்டாம் மூன்றாம் இடங் களிலும் ஷேவாக் நான்காம் இடத்திலும் உள்ளனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து வீரர் ஹர்மிஸன் முதலிடத்திலும், அனில் கும்ளே ஏழாவது இடத்திலும் உள் ளனர்.

(து-7)

## ஒரு நாள் தொடரில் கிறிஸ் ஹரிஸ் இல்லை

நியூசிலாந்து கிரிக்கெற் அணி யின் சகல துறை ஆட்டக்காரர் கிறிஸ் ஹரிஸ் இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் விளை யாடமாட்டார் என அறிவிக்கப்படு கிறது.

அவரது தோல்பட்டையில் ஏற் பட்ட காயத்திற்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் பின்னர் இன்னமும் அவர் முழுமையாக குணமாகா ததே அதற்கான காரணமாகும்.

5போட்டிகள் கொண்ட இந்த ஒருநாள் போட்டித் தொடர் நியூ சிலாந்தில் நடைபெறவுள்ளது.

முதற்போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி ஒக்லன்டில் நடைபெற வுள் ளமை குறிப்பிடத்தக்கது.

(து-7)

## யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்து, மீளக்குடியமர்ந்த மக்களுக்கான அறிவிப்பு

**மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட மீளக் குடியமர்தல் கொடுப்பனவான ரூ.25000/- முழுமையாக வழங்கப்ப டாமையை ஆட்சேபித்து கடந்த இரு வாரமாகச் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சில குடும்பங்களைச்சேர்ந்த மக்கள் யாழ்.செயலகத்தின் முன் மறியல் போராட்டம் நடாத்திச் செயலக அன்றாடக் கருமங்களை செயல்படாமல் தடுத்தமை தொடர்பாகப் பொது மக்களுக்கும், இவ்வாறு மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கும் பின்வரும் செய்தியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.**

22.02.2002இல் அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் மீளக்குடியமர்ந்த, மாதாந்த வருமானம் ரூ.2500/- இற்குக் குறைந்த குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் கொடுப்பனவாக ரூ.25000/- அவர்களுடைய வங்கிக் கணக்கு மூலம் கொடுப்பனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இக் கொடுப்பனவுக்கான நிதி அரசாங்கத்தினுடைய நிதி அல்ல. வெளிநாடுகளின் உதவியுடன் பெறப்படும் நிதி ஆகும். முக்கியமாக உலக வங்கி இதற்கான நிதியை வழங்குவதற்குச் சம்மதித்திருந்தது. இதன் அடிப் படையில் யாழ்.மாவட்டத்தில் 50,000 குடும்பங்கள் கடந்த மாதம் வரையில் மீளக்குடியமர்ந் திருக்கின்றார்கள். இவர்களில் 42,000 குடும்பங்களுக்கு இம் மீளக்குடியமர்தலுக்கான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என எம்மால் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் 32,821 குடும்பங்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றுக்கான நிதி பெறு வதற்கான முன்னோடி நடவடிக்கைகள் எம்மால் எடுக்கப்பட்டன. இவற்றில் இதுவரை 28,942 குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு எம்மால் செலவிடப்பட்ட நிதி ரூ.698 மில்லியன் ஆகும். இந்நிதி யாழ்.மாவட்டத்தின் பொருளாதார நடவடிக்கைகளுக்காக இக் குடும்பங்கள் மூலம் முதலிடப்பட்டுள்ளது. இதனை விட ஏறக்குறைய 6000 குடும்பங்களுக்குரிய கொடுப்பனவுகளுக்கான கையொப்பங்கள் பெறப்பட்டு இதற்கான நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் கையொப்பம் பெறப்பட்ட கால வரிசைக்கேற்ப இக் கொடுப்பனவு செய்வதற்கு இச் செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி வருவதில் சில காலதாமதம் ஏற்பட்டுள்ளது. என்பதை மறுக்கமுடியாது. எனினும் கடந்த வாரம் வடக்கு-கிழக்கு மாகாண சபையிலும், நிவாரண, புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சிலும் நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்புக் கூட்டத்திலும் இவ் 7000 குடும்பங்களின் நிலை பற்றி என்னால் எடுத்துரைக்கப்பட்டு, இவ் 7000 குடும்பங்களுக்கும் இவ் வருட முடிவுக்குள் கொடுப்பனவு செய்வதற்கான நிதியை வழங்குவதற்கு கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கான முன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் முதல் கட்டமாக 50 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது. இதனைக் கால ஒழுங்கின் அடிப்படையில் 2000 குடும்பங்களுக்கு இவ் வாரத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதிக் குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் தற்போதுள்ள நிலையில் இவ் வருடத்திற்குள்ளேயே வழங்கு தவற்கான முழு முயற்சிகளும் இச் செயலகத்தினால் செய்யப்பட்டு வடக்கு-கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தினாலும், நிவாரண, புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சின் உத்தியோகத்தர் களினாலும் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் செயலகத்தின் முன் மறியல் போராட்டம் நடத்துவதினால் இக் கொடுப்பனவு களைத் துரிதப்படுத்தும் என நான் நினைக்கவில்லை. அவ்வாறு மறியல் போராட்டம் செய்வதற்கு முன்வருபவர்கள் முன்னுரிமை ஒழுங்கின் நடைமுறையிலிருந்து நீக்கப்படுவார்கள்.

யுத்தத்தினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய புனர்வாழ்வு, நிவாரண, அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளை வருட இறுதியில் செய்துவரும் இச் செயலகத்தை முடக்கு வதன் மூலம் இக் கொடுப்பனவுக்கான காலதாமதம் கூடிக்கொண்டு செல்லுமே தவிர வேறு வகையில் முன்னேற்றம் ஏற்படும் என நான் நினைக்கவில்லை.

எனவே பாதிக்கப்பட்ட மக்கள் பொறுமையைக் கடைப்பிடித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரை கொடுப்பனவு செய்யப்பட்ட முழு விபரமும் கீழே தரப்பட்டுள்ளது.

### 2004 நவம்பர் மாதம் வரை

| | பிரதேச செயலர்.'. உ.அ.அதிபர் பிரிவு | இதுவரை மீளக்குடியமர்ந் தவர்களது மொத்த எண்ணிக்கை | நேர்காணல் முடிந்த குடும்பங்கள் | குடும்பபதிவு அட்டை வழங்கப்பட்ட வர்கள் | தகுதியான வர்களின் எண்.ணிக்கை | இதுவரை கொடுப்பனவு வழங்கப்பட் டவர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | நெடுந்தீவு | 134 | 96 | 96 | 96 | 38 | 95000 |
| 02 | வேலணை | 1,965 | 1,873 | 1,632 | 1632 | 1,116 | 26,97000 |
| 03 | ஊர்காவற்றுறை | 1,547 | 1,444 | 822 | 822 | 799 | 19,54000 |
| 04 | காரைநகர் | 1,351 | 1,316 | 1,232 | 1325 | 993 | 24,82500 |
| 05 | யாழ்ப்பாணம் | 3,314 | 3,102 | 2,328 | 2379 | 1,084 | 24,28000 |
| 06 | நல்லூர் | 3,368 | 3,122 | 2,533 | 2533 | 1,228 | 29,45500 |
| 07 | சண்டிலிப்பாய் | 3,157 | 2,944 | 2,435 | 2881 | 1,986 | 49,65000 |
| 08 | சங்கானை | 2,153 | 1,995 | 1,729 | 1826 | 1,382 | 33,63500 |
| 09 | உடுவில் | 2,320 | 2,188 | 1,764 | 1764 | 1,026 | 25,01500 |
| 10 | தெல்லிப்பழை | 1,417 | 1,351 | 870 | 1068 | 853 | 21,32500 |
| 11 | கோப்பாய் | 2,901 | 2,686 | 2,405 | 2673 | 2,230 | 55,21500 |
| 12 | தென்மராட்சி | 19,315 | 17,905 | 16,833 | 16,406 | 12,453 | 299,80500 |
| 13 | கரவெட்டி | 852 | 817 | 726 | 726 | 535 | 12,52000 |
| 14 | பருத்தித்துறை | 2,964 | 2,859 | 2,741 | 2741 | 1,289 | 30,36000 |
| 15 | மருதங்கேணி | 3,491 | 3,482 | 3,265 | 3265 | 1,930 | 44,45500 |
| | மொத்தம் | 50,249 | 47,180 | 41,411 | 42,137 | 28,942 | 698,00000 |

**செ.பத்மநாதன்,**
**அரசாங்க அதிபர்,**
**யாழ்.மாவட்டம்.**

(C/842)



ஜிந்தா என்கிற பெயர் உடைய சைபீரியன் புலிஅமெரிக்காவிலுள்ள கெண்டுக்கி நகரில் அமைந்திருக்கும் லூயிஸ் வில்லி மிருகக்காட்சிச் சாலையில் உள்ளது. 'சினை ஆகியிருந்த இந்தப் பெண் புலி ஒரு வாரத்துக்கு முன்பு 2 குட்டிகளை ஈன்றது.


இதுவரை அந்தப் புலியும் குட்டிகளும் பொதுமக்களின் பார்வைக்குக் காண்பிக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தன. நேற்றுமுன்தினம் முதன் முதலாக 2 குட்டிகளுடன் தாய்ப்புலி பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்டன. தாயும், சேய்களும் மகிழ்ந்து விளையாடிய காட்சியைப் படத்தில் காணலாம்.

ஜப்பான் டோக்கியோ நகரில் உள்ள ஒரு கண்ணாடி தயாரிக்கும் கம்பெனி ஒரு பெரிய செல்லோ இசைக்கருவியையும், ஒரு வயலினையும் மெல்லிய கண்ணாடியால் செய்து சாதனை படைத்துள்ளது.

வயலின், கிற்றார், செல்லோ போன்ற இசைக்கருவிகள் மெல்லிய மரப்பலகையால் செய்யப்படுவது வழக்கம். ஆனால் ஜப்பான் டோக்கியோ நகரில் உள்ள ஒரு கண்ணாடி தயாரிக்கும் கம்பெனி ஒரு பெரிய செல்லோ இசைக்கருவியையும், ஒரு வயலினையும் மெல்லிய கண்ணாடியால் செய்து சாதனை படைத்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த அவற்றின் அறிமுக விழாவில் அந்தக் கண்ணாடி இசைக் கருவிகளை 2 பெண் இசைக்கலைஞர்கள் மீட்டினார்கள். அதைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள். 25 ஊழியர்கள் ஒருவருடம் பாடுபட்டு இந்தக் கண்ணாடி இசைககருவிகளை உருவாக்கியுள்ளனர்.





வாடிகனில் உள்ள செயின்ட் பட்டர்ஸ் சதுக்கத்தில் 105 அடி உயரமுள்ள கிறிஸ்துமஸ் மரம் வைக்கப்பட்டுள்ளது. இந்த மரம் போப் ஜான் பாலுக்கு இத்தாலியிலிருந்து வழங்கப்பட்டது. அதையே படத்தில் காண்கிறர்கள்.

# பொய் சொல்லாதே!

பொய் சொல்வது உங்களுக்குப் பொழுதுபோககா? நீங்கள் பொய சொல்லும் போது உங்கள் உடலில், உங்களை அறியாமலே பல இரசாயன மாற்றங்கள் ஏற்படுவது உங்களுக்குத் தெரியுமா?

ஒருவர் பொய் சொல்லுகிறாரா என்பதை அவரது உடலின் சைகையை வைத்தே கண்டுபிடித்துவிடலாம் எனக் கூறுகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

ஒரு வியாபாரி சிரித்து சிரித்துப் பேசி அதுதான் அதன் விலையென உறுதியாகக் கூறுகின்றார் எனில், அவர் நிச்சயமாகப் பொய் சொல்கிறார் என்பது உறுதியாகிவிடும்.

மூக்கைத் தேய்த்தல், காதுச்சோணைகளைத் தடவுதல், தோல்பட்டையை உயாத்துதல், கண் விழிகளைப் பிதுங்கப் பிதுங்க முழித்தல், வாய் தடுமாறுதல், உடலில் நடுக்கம் ஏற்படக் கண்களை மிக விரைவாக மூடித் திறததல் போன்றன பொய் சொல்லும்போது நம்மையே அறியாது நமது உடலில் ஏற் ம் மாற்றங்களாகும. எனவே இனப் பொய் ்லும்போது கவனமாக இருங்கள். கள் உஙகளை இலகுவில கண்டு பிடித துவ க கூடும்.

## நீரே காலில் விழுந்தால்...

கம்பரும், சோழமன்னரும் வழக்கம் போல் மாலைநேரத்தில் சோலையில் உலாவிக்கொண்டிருந்தனர். ஓடிக்கொண்டிருந்த ஆற்று நீர் காலில் படும்படியாக இருவரும் நடந்து கொண்டிருந்தனர். நீர் வேட்கை கொண்ட கம்பர் அந்த ஆற்றின் தெள்ளிய நீரை அள்ளிக் குடித்தார்.

இதைக்கண்ட மன்னர் கம்பரை மட்டந் தட்ட விரும்பி, "கம்பரே என் காலில் விழுந்த நீரைத்தானே உண்டீர்?" என்று கிண்டலாகக் கேட்டார்.

உடனே அதற்குக் கம்பர் "நீரே காலில் விழுந்தால் நான் என்ன செய்வது" என்று பதிலடி தந்தார்.


## மீன்கள் தூங்குமா...?

நம்மால் கண்களைத் திறந்து வைத்துக்கொண்டு தூங்கமுடியுமா? முடியாது. நாம் தூஙகும்போது கண்கள் இமைகளால் நன்றாக மூடப்பட்டுவிடுகின்றன. மீன்களால் நம்மைப் போல தூங்கமுடியாது. ஏனெனில் நம் கண் இமைகளைப்போல மீன்களுக்கு இமைகள் இல்லை. எனினும் மீன்கள் தேவைப்படும்போது ஓய்வு எடுத்துக்கொள்கின்றன.

பெரும்பாலும் மீன்களுக்குத் தலையில் கண்கள் இருமருங்கிலும் அமைந்துள்ளன. ஒவ்வொரு கண்மூலமும் வெவ்வேறு உருவத்தைக் காணமுடியும்.

நம்மைவிட மீன்களின் பார்வைப் புலம் மிகுதியாக அமைந்துள்ளது. அவற்றால், முன்னாலும், பின்னாலும், மேலும், கீழும் நன்றாகப் பார் முடியும்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல - 40



அனுப்ப வேண்டிய முகவரி-

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 40**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

..........................................

இங்கே வெட்டுக ------------------------------ ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 23ஆம் த்கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

## இடமிருந்து வலம்

(1)உளவியல். (4)பகைவன் - இவனை இப்படியுமழைக்கலாம். (6)மனதை இப்படி வைத்துககொள்வது நலலது. (8) 'பாம்பு இது வானாலும் பெரிய தடிகொண்டு அடி' என்றொரு பழமொழியுண்டு. (9)ஊர்தி - இப்படியுமழைப்பர். (10)பிறரிடம் எதையும் எதிர் பாராமல் செய்வது.

## மேலிருந்து கீழ்

(1)உள்ளுணர்வு. (2)10 ஆண்டு காலத்தை இப்படிக் கூறுவர். (3)பற்றற்று வாழ்பவர். (5) உறுதி. (7)சர்ப்பத்தில் ஒரு வகை. (10)சகதி (கீ.மே).

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 38இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1.மகாபாரதம் 5.பயறு 6.காயம் 7.அவதி 8.கோப்பு 9.ரவை 10.ஆணம்

### மேலிருந்து கீழ்

1.மத்யமாவதி 2. பாணபத்திரர் 3.தற்காப்பு 4.கும்பகோணம்

### பரிசு பெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | சே.பொன்னுத்துரை<br>வங்களாவடிச் சந்தி,<br>வேலணை. |
| இரண்டாம் பரிசு | :- | மா.செளதரி<br>காளிகோவிலடி,<br>வரணி. |
| மூன்றாம் பரிசு | :- | கு.ஜனனி<br>கரணவாய்,<br>கரவெட்டி. |

### போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

P.செல்வராணி, சங்கானை. கே.இராஜகோபால், தொல்புரம. கே.அரசேஸ்வரன், நல்லூர். க.மலர், யாழ்ப்பாணம். A.சிலூஸ், மானிப்பாய். சி.விவேக், வியாபாரிமூலை. T.S.சங்கீதா, சம்பூரணி, வட்டுக்கோட்டை. S.நிகேதினி, வணணார்பணணை. லோ.அபிராமி, வல்வெட்டி. வி.இளங்கோ, கோப்பாய். சொ.நித்தியா, கொககுவில. L.சுவஸ்திகா, உடுப்பிட்டி. ஆ.அனுஷா, சிததன்கேணி. சு.தாஷினி, யாழப்பாணம. து.நக்கீரன், மல்லாகம. அ.க.பாக்கியநாத சோதி, யாழ்ப்பாணம். ச.மேகலா, நல்லூர். சி.சித்தார்த தன், தரிபப,ா. ஆ.அனித்தா, சித்தன்கேணி. K.யாழினி, கொக்குவில்.

### சதாமின் ஆட்சிக்காலப் படுகொலைகள் விவகாரம்

# குர்திஷ்களை விஷவாயு ஊட்டிக்கொன்ற கெமிக்கல் அலிமீதே முதலாவது விசாரணை

(பாக்தாத்)

சதாம் ஹுசைன் கூட்டாளியான கெமிக்கல் அலி மீது முதலில் விசாரணை நடத்தப்படும் என ஈராக் பாதுகாப்பு அமைச்சா ஹசிம் அல்-ஷலான் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீது கடந்த ஆண்டு தாக்குதல் நடத்தப்பட்டு சதாம் ஆட்சி ஒழிக்கப்பட்டது. கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் சதாம் பிடிபட்டார். சதாமுடன் அவரது தளபதிகள் மற்றும் அமைச்சர்கள் பலரும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஒரேயொருமுறை இவர்களிடம் விசாரணை நடந்தது. அதன்பின இதுவரை அவர்களிடம் விசாரணை நடக்கவில்லை. அடுத்தவாரம் இவர்கள் மீது விசாரணை தொடரப்படும் என இடைக்காலப் பிரதமர் இயாத் அல்லாவி தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து ஈராக் பாதுகாப்பு அமைச்சர் ஹசிம் அல் -ஷலான் குறிப்பிடுகையில்,

கடந்த 80ஆம் ஆண்டுகளில் விஷவாயுவைச் செலுத்தி ஏராளமான குர்திஷ் மக்களைக் கொன்றதாகக் கூறப்படும் சதாம் கூட்டாளி கெமிக்கல் அலி மீது முதலில் விசாரணை நடத்தப்படும்.

அடுத்தவாரமோ அல்லது ஜனவரி மாதம் இரண்டாவது வாரத்துக்குள்ளாகவோ இந்த விசாரணை நடத்தப்படும் என்றார். (ப)



அமெரிக்கா அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் மனைவி லாரா புஷ் வோஷிங்டனில் உள்ள சிறுவர்கள் தேசிய மருத்துவ முகாமல் கலந்து கொண்டு சிறுவர்களை உற்சாகப்படுத்தினார்.



கொல்கத்தாவில் நக்சலைட் தீவிரவாதிகள் பேரணி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அப்போது இளம் தீவிரவாதிகள் வில்-அம்புடன் அணி வகுத்து வந்தனர். அத்தியாவசியப் பொருட்கள் விலை ஏற்றத்தை எதிர்த்து இந்தப் பேரணி நடைபெற்றது.

# ஈராக்கில் குண்டுவெடிப்பு ஏழுபேர் உடல்சிதறி பலி

(பாக்தாத்)

ஈராக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காாக் குண்டுவெடிப்பில் ஏழுபேர் பலியாயினர். 13பேர் படுகாயமடைந்தனர்.

ஈராக்கில் கார்க் குண்டுவெப்புக்கள் தினசரி நிகழ்ச்சியாகிவிட்டது. இதனால தெருவோரங்களில் அனாவசியமாகக காரை நிறுத்தக்கூடாது என ஈராக் அரசும், அமெரிக்கப் படையினரும் எச்சரித்துள்ளனர்.

மீறி நிறுத்துபவர்களின் கார்கள் சிதைக்கப்படுகின்றன. இருப்பினும், சதாம ஆதரவு கொரில்லாக்கள் கார்க் குண்டு வெடிப்புகளை நடத்திவருகின்றனர்.

தலைநகர் பாக்தாத்தில் தூதரகங்களும், அமைச்சகங்களும் உள்ள பசுமைப பகுதியில் நேற்றுமுன்தினம் கார்க குண்டு வெடித்ததில் 13பேர் பலியாயினர். இதே பகுதியின் மற்றொரு முனையில் நேற்றும் கார்க்குண்டு வெடித்தது. இந்தச் சம்பவத்தில் ஏழு பேர் உடல்சிதறிப் பலியாயினர். 13பேர் படுகாயமடைந்தனர். தற்கொலைப் படையினர் இந்தத் தாக்குதலை நடத்தியதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் அமெரிக்க வீரர்கள யாரும் பாதிக்கப்படவிலலை. (ப)

# ஜனநாயகத்திற்காக குரல்கொடுத்த சீன எழுத்தாளர் யு. ஜீ கைதானார்

சீனாவில் ஜனநாயக உரிமைகளுக்குக் குரல்கொடுத்த எழுத்தாளர் உட்பட இருவ்ர் கைதுசெய்யப்பட்டனர்.

சீனாவில் கடந்த 1949 முதல் ஒரு கட்சி ஆட்சிமுறை அமுலிலுள்ளது. கம்ய,னிஸ்ட் கட்சியைத் தவிர வேறு கட்சிக்கோ இயககத்திற்கோ அனுமதிகிடையாது. ஜனநாயக உரிமைகோரி அங்கு அவ்வப்போது நடக்கும் போராட்டங்களை அரசு நசுக்குவது வாடிக்கை. சீனாவைச் சேர்ந்த எழுத்தாளர் யு.ஜீ. இவர் கம்ய,னிஸ்ட் கொள்கைகளைக் கடுமையாக விமர்சனம் செய்தார். அவருடன் சேர்த்து 5 முக்கிய நபர்களின் எழுத்துக்கு முக்கியத்துவம வழ்ங்க வேண்டாம் என்று நாளிதழ்கள் மற்றும் பத்திரிகைகளுக்கு சமீபத்தில் அரசு உத்தரவிட்டது.

அவரைப் பொலிஸார் கைதுசெய்தனர். பேச்சுரிமையை வலியுறுத்தும் 'பென்' என்ற இலக்கிய எழுத்தாளர் அமைப்புக் கடந்த 1921இல் பிரிட்டனில் நிறுவப்பட்டது. அதன் முக்கிய நிர்வாகக்குழு உறுப்பினர்களில் சீனாவைச் சேர்ந்த லியு ஜீயாவோபோவும் ஒருவர். இவரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

அவருக்குப் பரிசுவழங்கும் விழா சமீபத்தில் சீனாவில் நடந்தது. அதில் எழுத்தாளர்கள் பங்கேற்கக்கூடாதென அரசு தடைவிதித்தது. இதனால் விழா நடைபெறும் இடம் சீனப்பெருஞ்சுவர் அருகே ஒரு தொலைதூர கிராமத்திற்கு மாற்றப்பட்டது. தலைநகர் பீஜிங்கில் உள்ள தினான்மென் சதுக்கத்தல் 1989 ஆம் ஆணடு ஜுன் 04ஆம் திகதி பல்லாயிரக் கணக்கானோர் திரண்டு அரசுக்கெதிராகப் போராட்டத்தில் குதித்தனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தப் போராடடத்தில் பங்கேற்ற ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அதற்குச் சில தினங்களுக்கு முன் தினான் மென் சதுக்கத்தில் அரசைக் கண்டித்து நாலு பேர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். அவர்களில் ஒருவரான யு.ஜீ அப்போது கைதுசெய்யப்பட்டார். அவருக்கு விசாரணையின்றி 3ஆண்டு கடும் காவல்த் தண்டனை விதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ப)

## உலக தரிசனம்

# துருக்கியில் தீ விபத்து

(இஸ்தான்புல்)

துருக்கி நாட்டுத் தலைநகரான இஸ்தான்புல்லில் உள்ள திரையரங்கம் ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை தீ விபத்து ஏற்பட்டது.

இதனால் அந்த இடம் புகைமண்டலமானது. புகை அதிகமாக இருந்ததால் திரையரங்கிலிருந்த நூற்றுக்கும அதிகமானோருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. மூச்சுத்திணறலால் பாதிக்கபபட்ட 130 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இஸ்தான்புல் நகரப் பொலிஸார் தெரிவித்தனர். (ப)

# ரோபோ அரங்கேற்றம்

ரோபோ என்கிற பெயரில் எந்திர மனிதனை உருவாக்குவதில் ஜப்பான் முன்னிலைபெற்று விளங்குகிறது. பிரபல ஹொண்டா மோட்டார் கம்பெனி ஆசிமோ என்ற பெயரில் ஒரு நவீன வாக்கிங்டோக்கிங் ரோபோ மனிதனைத் தயாரித்துள்ளது.




இதனுடைய அரங்கேற்றம் நேற்று டோக்கியோ நகரிலுள்ள வாகோ அரங்கில் நடைபெற்றது. குழந்தை அளவு சிறிய வடிவம்கொண்ட நடக்கும், பேசும் ஆற்றல் படைத்த இந்த ரோபோ மேடையில் ஒரு அழகியுடன் கைகுலுக்கிய காட்சியை இங்கே பார்க்கலாம். (ப)

# லப் - டொப் கணனிகளால் ஆபத்து! ஆண்களே விழிப்பாய் இருங்கள்!

லப் - டொப் கம்பியூட்டரைத் தொடர்ந்து மடியில் வைத்துப் பயன்படுத்தும் ஆண்களுக்கு ஆண்மைத்திறன் குறைந்துவிடும் என்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவில் நியூயோர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிறுநீரகவியல் பேராசிரியர் யெபம் ஷியன்கின் இது குறித்து நணட ஆய்வு மேற்கொண்டுள்ளார். சமீபத்தில் இந்த ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில கூறியிருப்பதாவது:

நவீனகால தொழில்நுட்ப வளர்ச்சியின் வரப்பிரசாதமாகக் கருதப்படும் லப்-டொப் கம்பியூட்டர்களைத் தொடர்ந்து மடியில் வைத்தபடி பயன்படுத்தும் இளைஞாகளின் ஆண்மைத்திறன் குறைந்துவிடும் என்பது ஆய்வின்மூலம் தெரியவநதுள்ளது. லப்- டொப் கம்பியூட்டர்களில் உள்ள சிப்களுக்குக் கூடுதல மின்சாரம் தேவைப்படுகிறது. இதனால் லப் - டொப் கூடுதல் வெப்பத்தை வெளிப்படுத்துகிறது. பொதுவாக மடியில வைத்தபடியே லப் - டொப்களை இயக்கிவருகினறனர். லப்- டொப்பை நிலைநிறுத்தத் தொடைகளை இறுக்கமாக வைத்துக்கொள்கின்றனர். அப்போது லப் - டொப்பல் உண்டாகும் வெப்பம் பயன்படுத்துவோரின் உடலிலும் பரவுகிறது. குறிப்பாக ஆண்களின் விதைப்பையில் கூடுதல் வெப்பத்தை உணடாக்குகிறது. இந்தநிலை தொடர்ந்தால் பயன்படுத்துவோரின் விந்துக்களின் தரம் மற்றும் உயிரணுக்களின் எண்ணிக்கை பாதிக்கப்படுகிறது.

எவ்வளவு மணிநேரம் லப் - டொப்பைப் பயன்படுத்தவேண்டுமென்று உறுதியாகக் கூறுமுடியவில்லை. ஆனால், தொடர்ந்து பயன்படுத்தினால் குறுகிய காலத்திலேயே இந்தப் பாதிப்பு ஏற்பட்டுவிடும்.

இளைஞர்கள் இந்த ஆபத்தை உணராமல் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால திருமணத்திற்குப் பின் நிறையச சிரமங்கள்



ஏற்படும். எனவே முடிந்தவரை லப் - டொப கம்பியூட்டர் பயன்படுத்துவதைத் தவிர்க கலாம். இவ்வாறு அந்த ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ப)

தன் குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு - குறள்

வலம்புரி

# அவசர சிகிச்சைப் பிரிவில் யுத்தநிறுத்த உடன்படிக்கை

ஐயகோ! ஆபத்து...ஆபத்து... என்று புலம்ப வேண்டும் போன்ற மனநிலையில் சமாதானத்தை விரும்பும் மக்கள் உள்ளனர்.

அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை நீண்டு நிலைக்கமுடியாத இக்கட்டுக்குள் சிக்கி இருப்பதை நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

சமாதான சூழ்நிலைகுறித்து இருதரப்புடனும் சந்திப்புகளை நடத்துவதற்காக, இலங்கைக்கு வந்துள்ள நோர்வே தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்று முன்தினம் 'யுத்த நிறுத்தம்' தொடர்பான தனது கருத்தை வெளியிட்டிருந்தார்.

அதில் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஆயுளுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்பதை அவர் நாசூக்காக கூறியிருக்கின்றார்.

இதுகாறும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடனும், விடுதலைப்புலிகளுடனும் பல்சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருந்த தூதுவர் எரிக்சொல் ஒவ்வொருகட்ட சந்திப்பிலும் 'சமாதானம' குறித்து நம்பிக்கையான செய்திகளையே வெளியிட்டு வந்தார்.

ஆனால் இம்முறை அவரின் கருத்து வெளியீட்டில் மங்கல்- களைப்பு-நம்பிக்கையீனம் தெரிவதை உணர முடிகின்றது.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தி விடுவோம் என்ற நம்பிக்கையோடு கடந்த சில வருடங்களாக சமாதான முயற்சியில் ஈடுபட்டு வரும் எரிக்சொல் ,தற்போது யுத்தநிறுத்த உடன்படிக்கை ஆபத்தில் இருப்பதாக கூறுகிறார் எனில் ,சமாதானப் பேச்சுவார்த்தை எம்மட்டு என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

சமாதான பேச்சுவார்த்தை தொடர்பாக நோர்வேயின் தூதுவர் எரிக்சொல் ,உண்மை நிலையை வெளிப்படுத்த வேண்டுமென நேற்றைய தினம் இப்பகுதியில் எழுதியிருந்தோம்.

அவ்வாறு எழுதப்பட்ட கணத்தில் யுத்தநிறுத்தத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக எரிக்சொல்லின் செய்தி வெளியாகியுள்ளமை சமாதானத்தை விரும்பும் எவருக்கும் பேர் அதிர்ச்சியை கொடுக்கும் என்பதில் ஐயம் இல்லை.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்காவும் ,வீடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் கைச்சாத்திட்டு செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையானது கடந்த இரண்டு வருடங்களாக மனித உயிர்களுக்கு பாதுகாப்பு வழங்கியது.

யுத்தம் நடந்த இருபது வருடகாலத்தில் ஏற்பட்ட மனித உயிர்களின் அழிவுகள் சொத்துக்களின் இழப்புக்கள் எனப்பெரியதொரு பட்டியலை தயாரித்துவிட முடியும்.

இவ்வாறு இந்தமண்ணில் வாழவேண்டிய மனிதங்கள் யுத்தவிமானங்களுக்கும், எறிகணைவீச்சுக்கும் பலியாகிப் போனதன் சோகநெருடல் இன்னமும் இதயங்களை பிழிந்துகொண்டிருக்கும் வேளையில் யுத்தம் தந்த பரிசாக அகதி முகாம்களில் தமிழ் மக்கள் வாடிநிற்கும் வேளையில் , மீண்டுமோர்யுத்தத்தை ஏற்படுத்தி, புத்தபிரானின் புனித மண்ணுக்கு தமிழ் இரத்தத்தால் அபிசேகம் செய்யவிரும்பும் ஜே.வி.பி போன்ற சிங்கள பௌத்த இனவாதிகளை இந்த உலகம் இன்னமும் இனங்காணாமல் இருப்பது வேதனைக்குரியதாகும்.

நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசுடன் செய்துகொண்ட உடன்படிக்கை ,நடத்திய பேச்சுவார்த்தை இவற்றைப்பற்றி இம்மியும் கருத்தில் கொள்ளாத ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மற்றும் ஜே.வி.பினர் இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தபோவதில்லை என்பது இப்போது உறுதியாகி விட்டது.

இதனையே தூதுவர் எரிக்சொலின் கருத்தும் உணர்த்தி நிற்கின்றது. ஆக , விடுதலைப்புலிகளும் ஐக்கியதேசிய முன்னணி அரசும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையானது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் ஐக்கியதேசிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் ஆயுள் பலவீனப்பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெறும் நிலைக்கு ஆளாகியுள்ளது.

# சமாதான முன்னெடுப்புகள் வெற்றி பெறுவதற்கு அரசு-புலிகள் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்

## அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்க வேண்டுமானால் அரசும் புலிகளும் விட்டுக்கொடுப்புடன் செயற்படுவது அவசியம் என அமெரிக்கத்தூதுவர் ஜெப்ரி லம்ஸ்டட் தெரிவித்துள்ளார்.

இலங்கை சர்வதேச உறவுகள் நிலையத்தின் ஏற்பாட்டில் அறிவு,உளப்பாங்கு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அளவீட்டு வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைக் கூறினார்.

பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் மக்களின் அபிலாஷைகளை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். மக்களின் விருப்பங்களைத் தெரிந்து கொண்டால நிலையான தீர்வை ஏற்படுத்த முடியும்.

அளவிடுகையின் மூலம் மக்களின் விருப்பங்களை அறிந்துகொள்ள முடியும்.இந்த அளவிடுகை சமாதான முயற்சி தொடர்பில் மக்களின் அபிப்பிராயத்தைத் தெளிவாக வெளிப்படுத்தும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இரு மாவட்டங்களில் 3 ஆயிரத்து 500பேரிடம் பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இந்த அளவிடுகை தயாரிக்கப்பட்டது.

அமெரிக்க நிறுவனத்தின் நிதியுதவியுடன் இந்த அளவிடுகை மேற்கொள்ளப்பட்டது. நடைமுறை சமாதான முன்னெடுப்பு தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்படும் அபிப்பிராய பேதங்களை அறியும் வகையில் இந்த அளவிடுகை மேற்கொள்ளப்பட்டது.

இந்த அளவிடுகையின் மூலம் சமூகங்களுக்கிடையில் நம்பிக்கையைக் கட்டி வளர்க்க வேண்டிய தேவை இருப்பதாகவும் சமாதான நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்குப் போதுமான அறிவூட்டல் மேற்கொள்ளப்படவில்லையென்பது தெரிய வந்துள்ளதாகவும் அளவீட்டாளர்கள் இதில் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-9)

# ஜே.வி.பி சமாதானத்திற்கு எதிரானதல்ல இடைக்கால நிர்வாக வரைபே பிரச்சினை

## அமைச்சர் லால்காந்த விளக்கம்

(கொழும்பு)

சமாதானத்துக்கோ,சமாதானப் பேச்சுவார்த்தைக்கோ நாம் எதிரானவர்கள் அல்ல. விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையையே நாம் எதிர்க்கின்றோம் என்று கிராமியப் பொருளாதார அமைச்சரும் ஜே.வி.பியின் உறுப்பினருமான கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்த விடயங்கள் குறித்து நாம் அலட்டிக்கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

இதன்போது ஜே.வி.பியினர் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது குறித்து ஜனாதிபதியிடம் அவர்கள் அதிருப்தி தெரிவித்திருந்தனா.

அத்துடன், இதுதொடர்பில் உதவி வழங்கும் நாடுகள் நேற்று முன்தினம் காரசாரமாக கூட்டறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளன.

இதுதொடர்பில் ஜே.வி.பியின் நிலைப்பாடு குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் இதுவிடயம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

சமாதானச் செயற்பாடுகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடாதத நாங்கள் ஒருபோதும் எதிர்ப்புத் தெரிவித்ததில்லை. நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவது தான் மக்களின் விருப்பம். எனவே எமது கட்சியும் சமாதான செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கும். ஆனால் விடுதலைப்புலிகளின் யோசனைகளின் அடிப்படையில் பேச்சு நடாத்த அனுமதிக்கமாட்டோம்.

உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் எவ்வாறு கருத்துக் தெரிவித்தாலும் விடுதலைப்புலிகளின் யோசனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடாத்த நாம் ஒருபோதும் இணங்கமாட்டோம்.

உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் விடுத்துள்ள அறிக்கை இன்னமும் எமது பார்வைக்கு வரவில்லை. அது தொடர்பாக எமது கட்சி கவனம் செலுத்தியதும் நாம் எமது நிலைப்பாட்டினை அறிவிப்போம் எனக் குறிப்பிட்டார். (ந-4)

## ரஷ்யாவில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த உதவி மருத்துவ உத்தியோகஸ்தரை பதிவு செய்ய வேண்டாமென எதிர்ப்பு

(கொழும்பு)

ரஷ்யாவில் பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்த உதவி மருத்துவ உத்தியோகஸ்தர்கள் இலங்கை மருத்துவ சேவையில் பதிவு செய்யப்படுவதை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆட்சேபித்துள்ளது.

இந்த உத்தியோகஸ்தர்கள் ரஷ்யாவில் 6 மாதகாலம் மாத்திரமே பயிற்சி பெறுகின்றனர்.ஆனால் 6 வருட காலம் பயிற்சி பெற்றதாகக் கூறி போலிச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கின்றனர் என்று வைத்திய அதிகாரிகள் சங்கத்தின செயலாளர் கலாநிதி அனுருத்த பாதெனிய குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளா மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

6மாத கால பயிற்சியினைப் பூர்த்தி செய்ய வெளிநாடு செல்லும் உதவி மருத்துவ உத்தியோகஸ்தர்களுக்கு 3 வருட கால விடுமுறையை வழங்கியதாக கலாநிதி பாதெனிய சுகாதார அமைச்சைக் குற்றஞ்சாட்டினார்.

இந்த உத்தியோகஸ்தர்களை மருத்துவசேவையில் பதிவு செய்வதற்கு எதிரான நீதிமன்ற உத்தரவு முறையாக அமுல் செய்யப்படாவிட்டால் தமது சங்கம், தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்க நேரிடும் என்றும் அவர் மேலும் எச்சரித்துள்ளார். (ந-4)

## வெலிமடை மண்சரிவில் 4பேர் பலி;4பேர் காயம்

(பதுளை )

பதுளை மாவட்டம் வெலிமடையில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற மண்சரிவில் இரண்டு பெண்கள் உட்பட 4போ பலியாகியுள்ளனா. மேலும் 4 போ காயமடைந்து வெலிமடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளாகள்.

இந்தச் சம்பவத்தின் போது இவர்களுடைய இரண்டு வீடுகளும் மண்சரிவில் புதையுண்டுள்ளன.

அப் பிரதேசத்தில் பெய்த அடைமழை காரணமாகவே இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடாந்து பெய்துவரும் அடைமழை காரணமாக ஒரு வயதுக் குழந்தை உட்பட இருவா வெள்ளத்தில் மூழ்கிப் பலியாகியுள்ளனா.

கடந்த 13ஆம் திகதி மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி மாவடிவேம்பில் தர்மலிங்கம் சிந்துஜா என்ற ஒரு வயதுக் குழந்தை வீட்டிற்கு முன்பாக ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கி பலியானமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## கோதுமை மா தட்டுப்பாட்டை நிவிர்த்திக்க நடவடிக்கை எடுக்குக!

(கந்தர்மடம்)

கடந்த சில நாட்களாக குடாநாட்டில் பரவலாக நிலவிவரும் கோதுமை மா தட்டுப்பாட்டால் பொதுமக்கள் மாத்திரமன்றி, பேக்கரி உரிமையாளர் சங்கங்களும் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலைமை தோன்றியுள்ளது.

யாழ்ப்பாண பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் அங்கத்தவர்களாக உள்ள 65 பேக்கரி உரிமையாளர்களும் தங்கள் தேவைக்கேற்ற அளவு மாவைப் பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பிறிமா நிறுவனத்தால் இச்சங்கத்திற்கு வழங்கப்படும் கோதுமை மாவின் அளவு குறைக்கப்பட்டதால் தனது அங்கத்தவர்களின் மா தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறைந்த அளவு மாவே பேக்கரி உரிமையாளர்களுக்கு வழங்கப்படுவதால் மக்களின் பண் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை பேக்கரி உரிமையாளர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

அடை மழை மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற காரணங்களினால் பாணின் தேவை அதிகரித்துள்ள நிலையில், பொது மக்களுக்குத் தேவையான பாணை தடையின்றி வழங்க சம்பந்தபட்ட தரப்பினா உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது. (ந-85)

## ௐ தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**சுதந்திரமாக இருக்க வேண்டும் எப்போதாவது இதைப் பயிற்சி செய்து பாருங்கள். தியானத்தின் போது இந்த இயற்கையைக் கண நேரத்திற்கு நீங்கள் மாற்ற முடியும். இந்தச் சக்தி உங்களுக்குக் கிடைத்தால் அதுவே சொர்க்கம் ஆகாதா. முக்தி ஆகாதா? தியானத்தின் சக்தி அதுதான்.**

சுவாமி விவேகானந்தர்

# நோர்வே குழு 20ஆம் திகதி லண்டனில் பாலாவுடன் பேச்சு

## எரிக்சொல் இன்று இந்தியா பயணம்

(கொழும்பு)

நோர்வேயின் விசேடதூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் 20ந் திகதி விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்து ஜனாதிபதியுடன் பேசிய விடயங்கள் குறித்து விளக்கவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் சந்திப்புக்களை மேற்கொண்ட சொல்ஹெய்ம் இன்று இந்தியாவிற்குச் செல்லவுள்ளார்.

அங்கிருந்து நோர்வேக்குச் செல்லும் அவர், நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகியோரைச் சந்தித்து இலங்கையின் சமாதானம் தொடர்பாக அரசினதும் விடுதலைப்புலிகளினதும் நிலைப்பாடு தொடர்பாக எடுத்துக் கூறுவார்.

பின்னர் நோர்வேக் குழு 20 ஆம் திகதி திங்கட்கிழமை லண்டனுக்குச் சென்று சமாதானம் தொடர்பான அரசினது நிலைப்பாடு குறித்து அன்ரன் பாலசிங்கத்திற்கு விளக்கிக்கூறும். (ச)



வலி கிழக்குப் பிரதேச சபையால் பின்தங்கிய கிராமங்களில் உள்ள முன்பள்ளிச் சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில் சபையின் செயலாளர் இராசரத்தினம் இராசதுரை, முன்பள்ளி ஆசிரியை ஒருவரிடம் சத்துணவுப் பொதியை வழங்குவதையும் அருகில் உள்ளூராட்சி உதவியாளர் இ.தெய்வேந்திரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இடைக்கால நிர்வாக அடிப்படையில்...

கூறுவதற்கு அவருக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டபோதே செல்வக்குமார் இதனைத் தெரிவித்துள்ளார். பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு முன்னர் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தகுந்த தீர்வினை மேற கொள்வதற்கு ஜனாதிபதி ஆகிய நீங்கள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் தமிழ்மக்களின் குடியிருப்புகளில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

இதனால் மக்கள் வாழவழியின்றி அகதிமுகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலை மாற்றமடையவேண்டும். நிரந்தரத் தொழில் வாய்ப்புகள் இன்றி மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.

இவற்றிற்குரிய தீர்வினை மேற்கொண்டால் பல்கலைக்கழகங்களில் அபிவிருத்தி உடனடியாகவே ஏற்படுத்தப்படுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தமிழ்மொழி அரச திணைக்களங்களில் மழுங்கடிக்கப்பட்டு வருவதாகவும் அவ்வாறான நிலை மாற்றமடைந்து அரச திணைக்களங்களில் தமிழ் மொழி பயன்படுத்தப்படவேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். (ச)

## இடைக்கால...

டுக் கட்சி அமைத்தோம். அத்துடன் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கும் விடயத்தில் இரண்டு கட்சிக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை என்பதே இந்தக் கூட்டு முயற்சியின் முக்கிய நோக்கமாகும் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-04)

# மீண்டும் யாழில் 'சக்தி' சேவைகள்

தனியார் ஊடக நிறுவனமான சக்தி ரி.வி, சக்தி வானொலி என்பன நேற்றிலிருந்து யாழ்ப்பாணத்தில் ஒலி, ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன.

கடந்த 6 ஆம் திகதி சக்தியின் யாழ் அலுவலகம் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதையடுத்து சேவைகள் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மனிதச் சங்கிலிப் போராட்டம் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(சாவகச்சேரி)

சமாதானத்தை வலியுறுத்தி நாவற்குழி தொடக்கம் கொடிகாமம் வரை பொதுமக்களால் நடாத்தப்படவிருந்த மனிதச்சங்கிலிப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை இப்போராட்டம் நடைபெற இருந்தது. எனினும் இதற்குரிய ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்படாததால் இப்போராட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆர்ப்பாட்டத்தின் முடிவில் தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது. (ந-29)

# ஒஸ்லோ தீர்மானங்களிற்கு...

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம நேற்றுக்காலை 10 மணியளவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

அச்சந்திப்பின்போது சமாதான நடவடிக்கைகள் குறித்து எரிக் சொல்ஹெய்முக்கு விளக்கிக் கூறியதிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், நடைமுறையிலுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து முழுமையாகக் கடைப்பிடிப்பதோடு சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தாம் எப்போதும் தயாராகவிருப்பதாக மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கடந்த மாத முற்பகுதியில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் இலங்கை வந்துசென்றதன் பின்னர் ஏற்பட்ட சில நிகழ்வுகளும் வெளியிடப்பட்ட சில கருத்துக்களும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான ஆரோக்கியமானதொரு அம்சமாகக் கருதமுடியாது என்று தெரிவித்ததோடு, எதுவாயிருந்தபோதும் தன்னைப் பொறுத்தவரையிலும் அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க தேவை யான வழிவகைகளை எல்லாம் ஆராயத் தான் தயாராக விருப்பதாகவும் அவர் கூறினார்.

தமது அரசும் விடுதலைப் புலிகளும் மாறிமாறி அறிக்கைகளை வெளியிடுவதால் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை எனவும் அது சமாதான முயற்சிக்கு எவ்வித பலனையும் ஏற்படுத்தப்போவதில்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ச-4)

சினெ யாத்ரா -2
சர்வதேச விருதுபெற்ற நான்கு திரைப்படங்கள்
Award wining sinhala film festival
"மில்ல சொயா" - 18.12.2004 மு.ப. 10.00 மணிக்கு
இயக்குநர் : பூடி கீர்த்திசேன
"சுளங்கிரில்லி" - 18.12.2004 பி.ப. 3.00 மணிக்கு
இயக்குநர் : இனோகா சத்தியாங்கனி
"பவுரு வளலு" - 19.12.2004 மு.ப. 10.00 மணிக்கு
இயக்குநர் : பிரசன்ன விதானகே
"அக்னி தாஹய" - 19.12.2004 பி.ப. 3.00 மணிக்கு
இயக்குநர் : ஜயந்த சந்திரசிறி
இடம் :
கேட்போர் கூடம்
யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கே.கே.எஸ். வீதி
பிரவேசம் இலவசம்
திரிகோனே கலை மையம்
Trikone Arts Centre
(9098)

A/L பௌதிகவியல் இணைந்த கணிதம் வகுப்புக்கள்
பல ஆண்டுகளாக சிறப்பாகக் கற்பித்துவரும் ஆசிரியரினால் பௌதிகவியல், இணைந்த கணிதம் 20 வருட வினாத்தாள் உட்பட ஏராளமான பயிற்சிகளுடன், தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்பு:-
R.பாலசுப்பிரமணியம் B.Sc(cey)dip.in.Ed
17/1 பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்

ராஜா, யாழ்ப்பாணம்
சில தினங்கள் மட்டும்
இந்தியாவில் 200 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
சேரன், சினேகா, கோபிகா நடித்த
ஆட்டோகிராப்
காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்

நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
பிரசன்னா, நவ்யா, பிரகாஸ்ராஜ் நடித்த
அழகிய தீயே
கா.நேரம் : 10.30,2.30, 6.30 (பு.நே)
தினசரி இரவு 9.00 (பு.நே) மட்டும்
HULK (ஆங்கிலம்)
விரைவில்:
THE PASSION OF THE CHRIST
(இயேசு தேவரின் வாழ்வின் இறுதி 12 மணிநேரக்கதை)

நிறைஞ் சனாஸ் (சங்கானை)
ஸ்ரீகாந், சினேகா நடித்த
போஸ்
காட்சி நேரம்: 11.00,2.45,6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு (8.45 பு.நே)
URASSIC PARK -3

UNIT
நீங்களும் உலகின் முன்னணி கணனி உபயோகிப்பாளர்களில் ஒருவராகப் போகிறீர்கள் உலகில் நம்பர் 1 கணனிகள் என்று அங்கீகரிக்கப்பட்ட DELL கணனி உதிரிப்பாகங்களை தாயக மண்ணில் எங்கள் 3 வருட முழு உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கொழும்பு விலையை ஒத்து பெற்றுக் கொள்ளலாம்.
UNIT is unique for your feature
DELL'S INTRODUCTORY OFFER
உலகத்தரம்வாய்ந்த Perx இன வகை வகையான Wooferகள் மற்றும் Casing கண்காட்சியும் விற்பனையும்
நடக்குமா என்றார்கள்??? நடந்து விட்டது! ஆம் நடந்து விட்டது!
World No. 1
DELL Monitors @ Local Rate
Big Woofer Mela & Show
கொழும்பு விலையை ஒத்து
பலகோடி இந்திய மக்களால் அங்கீகரிக்கப்பட்ட நாங்கள் பின் உலமெங்கும் உள்ளவர்களால் அங்கீகரிக்கப்பட்டோம். எப்படி?
1. தரம் 2. நம்பிக்கை 3. உங்கள் கையிருப்பிற்குள் அடங்கிய சேவை 4. எங்களுக்கேயுரிய தொழில்நுட்ப பட்டறிவு மற்றும் தனித்தன்மை 5. தரச்சான்றிதழ்கள் 6. கணனித்துறையில் இந்திய பொறியியல் பட்டம் 7. 2 தசாப்தகால கணனி அனுபவம் என்னும் பல...
We are entirely different from others
புதுமை, தொழில்நுட்பம் என்பவற்றை பார்த்து பயப்படுபவர்களல்ல நாங்கள்... அவை பழக்கப்பட்டவை.
தங்கம் என்றால்கூட உரசிப் பார்த்தால்தான் தெரியும் எங்களையும் ஒருதரம் பரீட்சித்துப் பாருங்களேன்
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna,Sri Lanka.

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.